
# சாயி மகராஜ் குருவை தேடி
# SAI MAHARAJ GURUVAI THEDI


| ஆண்டு: 6 | இதழ்: 10 | மார்ச் - 2025 | விலை - ரூ.20/- |
|---|---|---|---|
| VOL:6 | ISSUE: 10 | March - 2025 | Rs. 20/- |

# சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

**அரிய**

**பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!**

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி எண்: 88258 31068.**

**தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே**

**பணம் அனுப்பவேண்டிய முகவரி:**

**V. SRIRAM,**
**INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.**
**A/C.NO: 62 19 48 06 77,**
**IFS CODE: IDIB000P056.**

**G- PAY, PHONE PAY, NO: 99418 16692**

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-10 மார்ச்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
**V.ஸ்ரீராம்**

கௌரவ ஆசிரியர்
**திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்**

விளம்பர பிரிவு
**திரு.T. கார்த்திகேயன்,** கோவை

கௌரவ ஆலோசகர்கள்
**திருமதி. S.சாந்தி,** சென்னை.
**திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி,** சென்னை.
**திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.**
**திரு. B.முருகன்,** சோழவந்தான்.
**டாக்டர் செல்வி. S.சௌம்யா,** ஊட்டி

இதழ் வடிவமைப்பு
**ஜெ.செந்தில்குமாரி**

**உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**V.ஸ்ரீராம்**
**9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம், சென்னை - 600023.**
**செல்: 99418 16692, 88258 31068**

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

# அமுத மொழி

## அன்புக் குழந்தையே....

கவலை கொள்ளாதே...! விரைவில் உன் வேண்டுதல் அனைத்தும் நிறைவேறும். உனக்கு எது தேவை,எது நல்லது, எதை கொடுக்க வேண்டும், எதை கொடுக்கக் கூடாது ஆகிய அனைத்தையும் நான் அறிவேன். உன்னுடைய ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு சொல்லும், என்னால் கவனிக்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

என்னிடம் பரிபூரண சரணாகதி அடைந்த உன்னுடைய, எல்லா பொறுப்புகளும் என்னுடையவை. உன்னுடைய எல்லா காரியங்களையுமும் நானே முன் நின்று நடத்துகிறேன். எனவே, இது எப் பொழுது நடக்கும், அது எப்போது கை கூடும் என்று புலம்பாமல் இரு.

அனைத்தையும் நான் பார்த்து கொள்கிறேன். ஒவ்வொருவருடைய வாழ்வில் நடக்கும் நிகழ்வுக்குப் பின்னால் நிச்சயம் ஏதோ சில காரணங்கள் இருக்கும். தற்போது இதை ஏற்றுக் கொள்வதற்கு சிரமமாக இருந்தாலும், பிற்காலத்தில் அவை உனக்கு தெரியவரும் நேரத்தில் உனக்கே அது புரியும்.

நம்பிக்கை இருந்தால் உன் வாழ்வில் இந்த நிலை மாறி சந்தோஷமான தருணங்களை அனுபவிக்கும் காலம் வெகு விரைவில் உன்னை வந்து சேரும். உனக்கு எல்லா சூழ்நிலைகளிலும் நான் துணையாக நிற்பேன். என் வார்த்தைகள் மீது நம்பிக்கை வைத்து செயல்படு. மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்.

**-பகவான் சீரடி சாய்பாபா**

**ஆசிரியர் பக்கம்...**

# அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!


*பகவான் சாயிநாதரின் பேரருளால் என்பதாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி! சென்ற இதழின் வெளியீட்டு விழா, 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம் சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் (9/1A, பழனியப்பா 2 வது தெரு, அயனாவரம்.) மிகச்சிறப்பாக நடைபெற்றது.*



*விழாவிற்குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் "ஆத்மஞானியர்" குழுவினர் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.*

*செல்வி அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் இறை வணக்கம் பாட, புத்தக வெளியீட்டு விழா இனிதே துவங்கியது. இம்மாத இதழை பள்ளிக்கரணை இறைச்சேவகர் திரு. சீனிவாசன் கொல்லூறு அவர்கள் வெளியிட, பெரம்பூர் சாயி பக்தர் திரு. சிவராமன் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.*

*விழாவை திரு. இராஜசேகர்*





அவர்கள் தொகுத்து வழங்க, திரு. சுந்தர்சாய்ராம், திரு. பாலாஜி, திருமதி. மாதங்கி பாலாஜி, உதவி ஆசிரியர் திருமதி.ஜெயந்தி ஸ்ரீராம், திருமதி.கீதப்பிரியா, திரு.பிரபு, திரு. சீனிவாசன், திரு.சிவராமன், ஆகியோர் குருவுடனான தங்களது "ஆத்மஞான" அனுபவங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர்.

ஆத்மஞானியர் குழுவினர், திரு.



பாலாஜி அவர்களின் தலைமையில், நமது குருவும், ஆசிரியருமான யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் பணிச்சுமையை குறைக்கும் வகையில் புத்தகவெளியீடு, மற்றும் சத்சங்கம், அன்னதானம் போன்ற பொறுப்புகளை 13 பேர் கொண்ட குழுவினர் முலமாக மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்.

அந்தவகையில் இம்மாதம் புத்தக வெளியீட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழை இலையில் சிறப்பு அன்னதானம் செய்வித்தனர். அதுமட்டுமின்றி ஆத்மஞானியர் அனைவரும் இணைந்து நமது குரு அவர்களுக்கு "குருகாணிக்கை" அளித்து சிறப்பு செய்தனர்.

சென்ற மாதம் பல்வேறு பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக இதழ் அச்சிடுவதில் பொருளாதார ரீதியாக மிகவும் சிரமம் ஏற்பட்டதால் நமது இதழின் விலையை ரூ.15 ல் இருந்து, ரூ.20 தாக உயர்த்தும்படி




ஆகிவிட்டதை வாசகர்களிடம் தெரிவித்திருந்தோம்.

விலையேற்றத்தை பொருட்படுத்தாமல், பாபாவின் மேல் உள்ள பக்தியின் காரணமாக எங்களது சாயி சேவைக்கு தொடர்ந்து ஆதரவு கரம் நீட்டுவோம் என்று பல சாயி அன்பர்கள் தொலைபேசி மூலமாகவும், நேரிடையாகவும் தெரிவித்திருந்தீர்கள். உங்கள் அனைவருக்கும் எங்களது மன மார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து உங்களது நல்லாதரவை வேண்டிக் கொள்கின்றோம்.

சென்ற மாதமும், சேலம் திரு. கலியன் சாய் அவர்களும், சென்னை திரு. கோபால் சாய் அவர்களும் நமது இதழுக்கு மூன்று வருட சந்தாதாரர்கள் தலா ஒருவரை இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார்கள். அவர்களும் அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று பிரார்த்திக்கின்றோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

**– அன்புடன் ஆசிரியர்**

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்




வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

## குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

தொடர் - 21

# திருவருள் தேடி

சாயி பக்தர்களுக்கு அநேகங்கோடி நமஸ்காரங்கள். சென்ற இதழில் சீரடிப்பயணம் செல்ல வேண்டும் என்ற எனது எண்ணத்தை எழுதியிருந்தேன் அல்லவா? வாருங்கள் எனது முதல் சீரடி பயண அனுபவத்தை பகிர்ந்து கொள்வோம்.

வழக்கம் போல் சாயிபாபாவின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு சீரடிக்குச் செல்வது என்று முடிவு செய்தேன்.


வலைதளத்தில் தேடி ஹைதராபாத்தில் இருந்து சீரடிக்கு தினசரி பஸ் வசதி இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். ஷீரடிக்கு முதல் பயணம், தனியாக, பாஷையும் அவ்வளவாக தெரியாது. தரிசனம் எப்படி இருக்கும் என்றும் ஒரு சிறு கவலை.



ஷீரடி டிக்கெட் புக் பண்ணலாம் என்று ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் 11 மணிக்கு 4 வது மாடியில் இருந்து கீழே இறங்கும் போது, ஒரு இஸ்லாமியர் வந்து என்னிடம் கையை


நீட்ட நானும் என் பையிலிருந்து அவருக்கு இயன்ற ரூபாயைக் கொடுத்துவிட்டு பேரூந்து நிலையம் சென்று சீரடிக்கு போகவர டிக்கெட் எடுத்துக்கொண்டு திரும்பினேன்.

வீட்டிற்கு வந்ததில் இருந்து மனதில் ஒரு விதமான எதிர்பார்ப்புடன் கூடிய பதட்டம். முதல் ஷீரடி பயணம். இங்கொன்றும் அங்கொன்றுமாய் அவரைப் பற்றி கேள்விப்பட்டது தவிர, பாபாவைப் பற்றியோ, ஷீரடி பற்றியோ எனக்கு ஒன்றும் அனுபவம் இல்லை. பக்தர்கள் அதிகம் பயணிக்கும் புண்ய ஷேத்திரம் என்பதால் கூட்டம் எப்படியிருக்கும், தரிசனம் உடனே கிடைக்குமா என திருப்தியை ஒப்பிட்டு ஒருநிமிட தரிசனமாக இருக்குமோ என எண்ணக் குதிரை அலைய ஆரம்பித்தது.



ஒருவழியாக பாபாவிடம் தங்கள் தரிசனம் முடியும் வரை இல்லத்திலிருந்து கிளம்பிய நேரம் முதல் ஒன்றும் உண்ணுவதில்லை என்ற முடிவுடன் மாலை 5.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 6 மணியளவில் ஷீரடி வந்து ஹோட்டலில் காலை கடன்களை முடித்துக்கொண்டு, சக பயணிகள் சிலருடன் சமாதி மந்திர் நோக்கி கிளம்பினேன்.

எண்ணம் முழுவதும் ஒரு



**சுந்தர் சாய்**
**9789404451**

வித தவிப்புடன் தரிசன வரிசையில் இதயத்தை கையில் பிடித்துக் கொண்டு நகரும் போது எனக்கு முன்னர் கர்நாடகாவில் இருந்து வந்திருந்த 2-3 பக்தர்களிடம் கன்னடத்தில் பேச வாய்ப்பு கிடைத்தது. நாம் பேசத் தெரிந்த பாஷை என்பதால் சமாளித்துக் கொண்டு அவர்களுடனேயே ஒட்டிக்கொண்டு வரிசையில் முன்னேறினேன்.


இதோ! –சாய் தர்பார் மண்டபத்தில் காலடி வைக்க "ஸ்ரீ சாய்நாத் மகராஜ்க்கு கீ ஜெய்" "ஷீரடி பாபா கீ ஜெய்" என பக்தர்களின் ஆரவார கோஷத்துடன் என் முதல் சாயி தரிசன அனுபவமே வியக்க தக்கதாய் ஒரு மஹராஜா சமஸ்தானத்தில் நுழைந்தது போன்ற அற்புதமான ஓர் தாக்கம். பக்தர்கள் அனைவரும் விரைவாக தரிசனம் செய்து முன்னேற காவலர்களின் "சலோ சலோ"– கோஷம்.

கண்ணீர் மல்க அளவிட முடியாத ஆசை, ஏக்கத்துடன் முன்னேற பாபாவின் சமாதி முன் வந்தவுடன் எனக்கு நேர் எதிரே பாபா கருணை விழிகளுடன் கம்பீரமாய் அமர்ந்திருக்க, கூப்பிய கைகளுடன் விழியில் நீர் வழிய நான் பாபாவை பார்க்கிறேன், கண்டதும் காதலாய்" முதற்பார்வையிலேயே அப்படி ஒரு ஈர்ப்பு. குப்பென்று பற்றிய நெருப்பாய் இன்றளவும் கொழுந்துவிட்டெரியும் "சாய்சக்தி". முதல் சந்திப்பிலேயே "மிராக்கிள்" செய்தார் சாய்.

சாய் தரிசனம் தொடர்கிறது 10 நிமிடங்களாய் யாரும் என்னை நகரவோ, போகவோ சொல்லவில்லை. என்னை முன்னே செல்லமுடியாதபடி தடைசெய்து, சமாதியின் மீது இருக்கும் மலர்களை சுத்தம் செய்து, ஒழுங்கு செய்து கொண்டிருந்ததால், ஒரு நிமிடம் தரிசனம் – 'பாபாவும்' – இவ்வளவு நாட்களாய் சுற்றிக் கொண்டிருந்தாய்? ஏன் தாமதம் என்று கேட்பது போன்ற உணர்வு.

தரிசனம் முடித்துக் கொண்டு குருஸ்தான் வந்தவுடன் எனது கன்னட நண்பர்களிடம் நான் முதல்முறையாக வருவதால் வேறு எங்கெல்லாம் செல்ல வேண்டும் என கேட்டேன். அவர்கள் உடன் வாருங்கள் என அழைத்துச் சென்ற இடம் கேன்டீன். நமது மனங்களை படிப்பதில் பாபாவுக்கு நிகர் வேறொருவர் இல்லை என உணர்த்திய தருணம் அது. இரண்டாம் அனுபவமாய் நான் பாபா தரிசனம் நிறைவேறும் வரை ஒன்றும் சாப்பிடுவதில்லை என உறுதியுடன் வீட்டிலிருந்து கிளம்பியதால் தரிசனம் முடிந்தவுடனே மனம் நிறைந்தது போல், வயிறும் நிறைய பாபாவின் கடமையாய் கேன்டீன் விசிட்.

பின்னர் சமாதி மந்திர் வளாகத்தினுள் ஒவ்வோர் இடமாய் அழைத்துச் சென்று விளக்கி தரிசனம் முடித்து, பின்னர் துவாரகாமாயி சாவடி, ஹனுமான் மந்திர் என ஒரு சுற்று எல்லாம் முடித்துக் கொண்டு, 'உதி' கவுண்டரில் திரும்ப திரும்ப 4–5 முறை உதி பிரசாதம், லட்டு பிரசாதம், பாபாவின் படங்கள், சாய் சத்சரிதப் புத்தகம் என எல்லா விதப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு அறைக்குத் திரும்பினேன்.



இப்பிறப்பின் மிக மிக முக்கியமான கட்டத்திலிருப்பதாக அன்று நான் அன்று உணர்ந்திருக்க வில்லை தான். ஆனால் கிடைத்த தற்கரிய பாபாவின் கருணாமூர்த்தி தரிசனம் முறையாக, முழுமையாக 10–15 நிமிடங்கள் திடமாக முதல் என்ட்ரியிலேயே கிடைத்தது முன்னோர்கள் செய்த புண்ணிய பலன். மிகுந்த மன நிறைவுடன் மீண்டும் மீண்டும் சமாதி மந்திரில் தரிசனம் செய்து சுற்றித் திரிந்து ஹைதராபாத் வந்து சேர்ந்தேன்.

என் குடும்பத்தினரிடமும் என் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள, அவர்கள் என்னை ஒரு மாதிரி தான் பார்த்தார்களேயன்றி முழுமையாக அந்த அனுபவத்தை புரிந்து கொள்ளவில்லை. நானும் தான். நம் வாழ்க்கையில் வர இருந்த மாற்றங்களை அந்த முதல் பயண அனுபவம் முழுமையாக உணர வைக்கவில்லை.

நானும் ஷீரடி சாய் சத்சரிதத்தை படிக்க ஆரம்பித்தேன். ஷீரடி சாய் பக்தர்களின் அற்புத அனுப வங்கள், பாபாவின் கருணாமிர்தம் எல்லாமே என்னை ஒருவித உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்க டிக்க ஆரம்பித்தது. கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்தி சென்னையில் உள்ள சொந்தங் களைப் பார்க்க முடிவு செய்து சென்னை வந்து சேர்ந்தேன். முதலில் என் மூத்த சகோதரி வீட்டில் ஒரு ஷீரடி சாய்பாபாவின் பளிங்கு மூர்த்தி இருப்பதைய றிந்து அதை கேட்டு வாங்கிக் கொண்டேன்.

என் பால்ய சிநேகிதர் மனோகர் இல்லத்திற்குச் சென்று என் சந்தோஷமான அனுபவங்களை பகிர்ந்து கொண்டு அவரிடம் ஷீரடி சாய் பாபாவின் படம் மற்றும் உதி பிரசாதங்களை பகிர்ந்து அவரையும் பாபாவை பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொண்டு அவர் வீட்டிலிருந்து வெளிவரும் சமயம் கவனித்தால் அவரது குடியிருப்பின் நேர் எதிரே உள்ள வீட்டின் வாசலில் உள்ள மரக்கதவில் மரவேலைப் பாட்டில் ஷீரடி சாய் உருவம் கண்டு பிரமித்துப் போனேன்.

பின்னாட்களில் அவரது மனைவியை தன் அன்பிற்கு பாத்திரமாக்கி, கோவிலில் எல்லா விதமான சேவைகளையும் செய்ய வைத்து நமது பாராயண குழுவிலும், நாம ஜெப குழுவிலும் ஓர் தீவிர பங்கு கொள்ள வைத்து எங்கள் நட்பை மேலும் உறுதியாக்கினார். அவரது குடும்பத்தினர் சார்பாக நமது சாயிக்கு மனமார்ந்த நன்றியும் அன்பும் உரிதாகட்டும்.

ஒரு வழியாக ஹைதராபாத் திரும்பிவந்து பாபாவின் மூர்த்தத்தை வீட்டில் வைத்து மலர்கள் சூட்டி, அபிஷேக ஆராதனைகள் செய்து, சத்சரித பாராயணம் செய்ய ஆரம்பித்தேன், ஒருவழியாக பாபா எனது உள்ளத்தை ஆட்கொள்ள ஆரம்பித்தார்.

இப்படியாக ஒரு மாதம் முடிகின்ற பொழுது திரும்பவும் நமது முன்னால் சி.ஏ.ஓ. போன் செய்து, திரும்பவும் வேலைக்கு வர விருப்பம் இருக்கிறதா? ஆம்

என்றால் வேறு ஒரு நாட்டிற்கு அனுப்புவதாக உறுதியளித்தார். நானும் நடந்த விஷயங்களை நன்றாக அலசி ஆராய்ந்து, எனக்கு விருப்பமில்லை என்று கூறி என் ராஜினாமா முடிவை தெரிவித்து விட்டேன்.

மேற்கொண்டு என்ன செய்வது? வருமானத்திற்கு ஏதாவது ஒரு வேலை செய்தால் தானே வழி என குழம்பிக் கொண்டிருந்த சமயம். கடந்த 6–7 மாதங்களாய் நம்மை இ–மெயிலில் தொடர்பு கொண்டு வந்த ஒரு மும்பை நண்பர் மீண்டும் தொடர்பு கொண்டு அவர்கள் வியாபாரத்திற்கு நான் வேலை செய்த நாடுகளில் ஓர் அறிமுகம் ஏற்படுத்தி தர வேண்டும் என வற்புறுத்தினார்.

நானும் இந்தியாவிற்கு திரும்பிவிட்டதால் நேரில் சந்தித்து, விளக்கமாக பேசி ஓர் புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொண்டால் முயற்சிக்கலாம், மேலும் தொலைபேசியில் எந்த முடிவும் எடுக்க முடியாது, நேருக்கு நேர் சந்திக்க வேண்டும் என உறுதியாக தெரிவித்தேன். அடுத்த நாளே கூரியர் சர்வீஸில் எனக்கு மும்பை சென்று திரும்ப விமான டிக்கெட்டை அனுப்பி அவரது விருப்பத்தை தெளிய வைத்தார்.

என்னை விமான நிலையத்தில் வரவேற்க வந்த மும்பை நண்பரைப் பார்த்தவுடனேயே நான் அவரது கையில் சிறிய ஷீரடி சாய் படத்தைக் கொடுத்து, இப்பொழுது முதல் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஷீரடி பாபா சாட்சி என்றும், நாங்கள் ஒருவரை ஒருவர் தெரியாத சூழ்நிலையில் நாம் பாபாவிற்கு உண்மையாக இந்த வியாபார நட்பை கொண்டு செல்ல வேண்டும் என உறுதியாக சொன்னேன்.

அவர் மராத்தியாக இருந்தாலும், தன்னை மட்டும் நம்புவராக இருந்தார். அவர் பெயர் "பராக்" (Parag). இதுவும் ஷீரடி சாயி பாபாவின் ஏற்பாடே என உறுதியாக நம்பி அவர் வேலை செய்யும் கம்பெனியின் எம்.டி யை பார்த்து விரிவாக உரையாடி, நானும் என்னாலான முயற்சிகளை தீவிரமாக நடத்துவதாகவும் எனக்கு அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய சப்போர்ட் மற்றும் "கன்சல்டன்சி சார்ஜ்" முதலியவற்றை தெளிவாக உரைத்து சம்மதம் பெற்று திரும்பினேன்.

இந்த புதிய முயற்சியில் இந்தியாவில் இருந்தே வேலை செய்ய முடியும். தேவைப்படும் பொழுது வெளிநாடு சென்று வேண்டிய நாட்கள் தங்கி பின்னர் திரும்பலாம் என முடிவு செய்து, நான் வேலை செய்த அசர்பைஜான் நாட்டிற்கு சென்று எனது வேலையை ஆரம்பித்தேன். மீதமுள்ள நாட்களில் இந்தியாவில் கோவில் கோவிலாக திரிய ஆரம்பித்தேன். பூஜைகள், யாகங்கள், கோவில் விழாக்கள் என திரிந்து இரையுடன் இறையையும் தேடினேன். இரை கிடைத்தது... இறை? அடுத்த மாதம் கூறுகின்றேன்.

**தொடரும்**



தொடர் - 44

# அதிதேவதை

**க**பர்டேவை பற்றி துப்பறிவதற்காக வந்த அரசாங்க ஒற்றனின் கதை இது. 28–12–1911ல் ஷீரடிக்கு நானா சாஹேப் சாந்தோர்கர், சி.வி. வைத்யா, திரு. நடேகர் இம்மூவரும் வந்தனர். இவர்களில் ஒற்றனாக வந்தது நடேகர் என்பவர். தன்னை சாதுவாக பாவித்து அதற்குரிய அடையாளங்களுடன் வந்திருந்தார். கபர்டே மீது பல குற்றச்சாட்டுக்கள் இருந்தமையால் அவருடைய நடவடிக்கையை கண்காணிக்க வந்தார்.

மேலும் கபர்டே மீதான குற்றங்களை நிரூபிக்கும் வகையில் ஏதேனும் தடயம் கிடைக்கும் என்பதே நடேகரின் நோக்கம். சரியான சந்தர்ப்ப சூழ்நிலையில் நடேகர் ஷீரடிக்கு வந்து கபர்டேவுடன் நட்பு பாராட்டி அவருடனேயே தங்கவும் செய்தார். நடேகரை உண்மையாக சாதுவாக நினைத்து கபர்டேவும், அவரைச் சார்ந்தவர்களும் மரியாதை தந்து சுவாமியாக பாவித்தனர்.

நடேகர் ஷீரடிக்கு வந்த மறுதினம் பாபா கபர்டே மனைவியிடம் கூறினார். "கவர்னர் ஈட்டியுடன் வந்ததாகவும், தம்மிடம் உள்ள சூலத்தால் சண்டையிட்டு அவரை விரட்டி விட்டதாகவும் கடைமுடிவாக கவர்னரை சமாதானப்படுத்தி அவர் இங்கிருந்து அகன்று செல்வதற்கு இணங்க வைத்ததாகவும் கூறினார். பாபா கூறியது அரசாங்க ஒற்றனான நடேகரை பற்றியே குறிப்பிட்டார்". சாதாரண மனிதனை ஏமாற்றலாம் பாபாவை ஏமாற்ற எவரால் இயலும்.

பாபா நடேகர் வீட்டிற்கு ஏன் வந்தார், எதற்கு வந்தார் என்பதெல்லாம் நன்கு அறிந்து வைத்திருந்தார். நடேகரின் பிறவியின் புண்யபலனே ஷீரடிக்கு வரவழைத்தது. பாபா நடேகரின் மனதை மாற்ற நிகழ்த்த அவர்

**சாய் சரவணன்**

கையாண்ட யுக்தி யாதெனில், நடேகர் கபர்டேவுடன் நட்பு பாராட்டியதைப் போல, இராதா கிருஷ்ணமாயியிடம் நட்பு பாராட்டி ஆயியின் சத்சங்க லாபத்தினால் நடேகரின் வாழ்வில் மாற்றங்களை நிகழ்த்த லீலை புரிந்தார்.

பாபா நடேகர் பற்றிய ரகசியங் களை ஆயியிடம் சூட்சும ரீதியாக அனுப்பி வைத்து விட்டார். மஹான்களுடைய பாஷைகள் சூட்சுமமாகவே இருக்கும். ஆயியியும் பாபாவின் குறிப்பை உணர்ந்தாள். பாபா லீலை புரிய தொடங்கினார். திரு.கபர்டேவுடன் நடேகர் மிகவும் நண்பரானார்.


கபர்டேவிடம் நடேகர் தனது வாழ்வில் நிகழ்ந்த ஆன்மீக விஷயங் களை பரிமாறிக்கொள்வார். அதே போல் இராதாகிருஷ்ணமாயியிடம் நட்பு பாராட்டி ஆயியோடு நேரத்தை செலவழிப்பார். பிருந்தா வனத்தில் ஆயியால் பாடப்படும் அபங்க தாள இசையில் ஆயியின் பக்தி பாவத்திலும் தன்னையே மறந்துபோவார். ஆயியோடு இருக்கையில் நடேகரிடம் ஆயி பல ஆன்மீக சம்பந்தமான உரை யாடலையும் நிகழ்த்துவாள்.

அவரோ அதில் மூழ்கி ஷீரடிக்கு தான் எதற்காக வந்தோம் என்பதை மறக்கும் அளவிற்கு பக்தியில் மூழ்கும்படி ஆயி செய்துவிடுவாள். ஆயி நடேகருக்கு தேவையான அத்தனை சேவைகளையும் செய் வாள் பெற்ற தாயைப் போல. ஆயியால் நடத்தப்படும் பிராத் தனையிலும், பஜனையில் முழுவதுமாக சேர்த்துக் கொள்வார். நடேகரின் மனது ஷீரடிக்கு வந்த திலிருந்து இறைவழிபாட்டில் கவனம் செலுத்தும் படி நேர்ந்தது.

தக்க சமயத்தில் ஆயி நடேகரின் மனதில் கபர்டேவை பற்றிய சந்தேகங்களை நீக்கி அவரை சமாதானப்படுத்தினாள். பாபா கபர்டேவின் மனைவியிடம் கூறிய வாக்கை நினைத்துப் பாருங்கள். நடேகர் 31–12–1911 அன்று ஊருக்கு புறப்படத் தயாரானார். கபர்டே நடேகரை தேடினார். கபர்டே நடேகரை கண்டுபிடித்து எங்கே சென்றீர் என்று கேட்க, "எனக்கு தூக்கம் வரவில்லை, வெளியே சுற்றி திரிந்தேன் கண்டோபா கோவிலுக்கு சென்றுபின் இராதா கிருஷ்ணமாயியின் வழிபாட்டில் கலந்து கொண்டேன்.

மேலும் பாபா அனுப்பிய உணவை ஆயி எனக்களித்தார். ஆயி என்னோடு பேசிக் கொண்டி ருந்தாள் எனக் கூறினார். பிறகு ஊருக்கு புறப்படும் முன் ஆயியிடம் சொல்லிவிட்டு செல்ல பிருந் தாவனத்திற்கு வந்தார். ஆயியோ நடேகருக்கு தன் கரங்களால் வேட்டி சட்டை பிரசாதமாக தந்து வழி அனுப்பினாள். நடேகருடன் சேர்ந்து ஆயியுடன் தங்கியிருந்த ரேகேவும் சென்றார்.

சில காலம் கழித்த பிறகே கபர்டேவிற்கு தெரிந்தது. நடேகர் என்பவர் அரசாங்க ஒற்றன் என உண்மையை அறிந்து தன்னை காப்பாற்றிய பாபாவிற்கு நன்றி கூறினார். உண்மையில் எத்தகைய நயவஞ்சக மனம் கொண்டோரும் ஒரு சிறந்த மஹானோடு பழகும்



பாக்யம் கிடைத்தால் தீய எண்ணம் கொண்ட மனம் தூய்மையாக்கப் பட்டு நல்வழியில் பயணிக்க தொடங்கிவிடும். இத்தகைய அற்புத லீலையே நடேகருக்கு நிகழ்ந்தது. பாபாவின் கருணையை என்னவென்பது!

இராதாகிருஷ்ணமாயி ஸ்ரீ சாயிநாதர் ரஹதாவிற்கோ (அ) ரூயிகிராமத்திற்கோ செல்வது தெரிந்தால் பாபாவை வழியனுப்ப கூடவே செல்வாள். பாபா ஷீரடிக்கு திரும்ப வருவது பற்றி அறிந்தால் ஆயி பாபாவை வரவேற்க காத்திருப் பாள். ஆயியால் ஆரம்பித்து வைக் கப்பட்ட சத்சங்கமான வகுப்புகள் நாளடைவில் சிறப்பாக நடக்கத் தொடங்கியது.

பஞ்சதசி வகுப்புகள், ராமாயணம், பாகவதம், பஜனைப் பாடுவது என அனைத்தும் ஆரம் பித்தன. பீஷ்மா, கபர்டே, ஜோக், தீட்சித், உபாசினி பாபா, கோகலே என பல அடியவர்கள் இத்தகைய சத்சங்க வகுப்புகளை சிறப்பாக நடத்தியும், பயின்றும் நற்பலன்களை எல்லாம் பெற்றனர். சீரடியில் பிளேக் நோய் பரவத் தொடங் கியது. ஆயியோ அடிய வர்களை கொண்டு ஷீரடியின் வீதிகள், கல்ல றைகள் என எல்லா இடங்களையும் சுத்தம் செய்து எல்லோரையும் சுத்தமாக அவரவர் இடங்களை வைத்துக் கொள்ள கூறினாள்.

ஆனால் யாரும் ஆயியின் பேச்சை மதிக்கவில்லை. பிறகு பாபா பிளேக் நோய் பரவாமல் தடுக்க 11.12.1911 அன்று பல குறிப்புகளை தந்தார். அந்த குறிப்புகளை பாபாவின் அருளால் ஆயி ஏற்கனவே அறிந்து கொண்டு செயல் படுத்தி அதில் வெற்றியும் பெற்றாள்.

ஒரு முறை இராதாகிருஷ்ணமாயி நம் சாயிநாதரின் உடைகளை துவைத்தாள். இதைக் கண்ட பாபா கோபம் கொண்டு வசவுகளை மழையாய் பொழிந்தார். ஆயியோ அந்த புண்ணிய மழையில் நனைந்தாள். ஆயிக்கு பிறகு என்னவானது என அறியவில்லை. ஆயி வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளேயே இருந்தாள். பாபாவின் ஆரத்தி பொருட்கள் உள்ளேயே இருக்க அப்பொருட்களை அடிய வர்களால் எடுக்க இயலவில்லை.

பாபாவிடம் ஆயியின் செய்கை குறித்து கூறப்பட்டது. பாபாவோ ஒன்றும் பேசாது மௌனம் சாதித்தார். அடுத்த நிமிடமே ஆயியிடமிருந்து ஆரத்தி பொருட்களும், நெய் வேத்யமும் வந்தது. ஆயியின் செய்கையை குறித்து ஆராய்ந்தால் ஆயி தன்னை மறந்து ஒருவித யோக நிலையில் மூழ்கியிருந்தால் என்பதை மட்டும் அறிய முடிகின்றது. இதை அறிந்த பாபாவும் ஒன்றும் கூறவில்லை.

நம் அன்னை இராதாகிருஷ்ண மாயி, ரேகே போன்ற பல அடியார் களுடைய ஒத்துழைப்பால் மசூதியின் வாசலில் அலங்கார வளைவுகளை ஏற்படுத்தி கொடியாக படரும் அலங்கார செடிகளை நட்டு பராமரித்தாள். அது நாளடைவில் அலங்கார வளைவுகளில் படர்ந்து ஒருவித அழகை தந்தது. ஒரு நாள் ஆயி அடியார்கள் மூலம் செயற்கை பூந்தோட்டம் மற்றும் செயற்கை நிலாவையும் வீரடிக்கு வரவழைத்தாள்.

கல்யாண வீட்டில் அலங் கரிக்கப்படும் செயற்கை பூந்தோட்டத்தை மசூதியின் அருகே அமைத்து அங்கே செயற்கை நிலாவையும் வைத்தாள். ஆயி இரவு நேரத்தில் அந்த செயற்கை நிலாவை ஒளிவீசும் படி ஏற்றி விட்டாள். அந்த நிலா அற்புதமாக ஒளி வீசியது. ஆயியின் இந்த ஏற்பாடுகளை கண்டு அடியவர் கூட்டம் வியந்து பாராட்டியது.

ஒருமுறை இராதாகிருஷ்ணமாயி யிடம் சத்சங்கத்திற்கான உரை யிடலில் தீட்சித் கலந்து கொண்டார். அப்போது ஆயி ஏக்நாத்பாகவதம் ஏக்நாத் இராமாயணம் பற்றி விளக்கி கூறினாள். தீட்சித் ஆயியின் சத்சங்க லாபத்தில் நிறைய சம்பாதித்தார். ஆயியின் சாலாவில் நடந்த சத்சங்கம் முடிந்து தீட்சித் பாபாவை காணச்சென்றார். பாபா தீட்சித் அவர்களிடம் "நீ ஏக்நாத் பாகவதம் – பாவார்த்த இராமாய ணத்தையும் நித்யமாக படி என்று ஆணையிட்டார். எப்பேர்பட்ட லீலை இது. ஒரு சமயம் தீட்சித் "பக்திமாலா" எனும் நூலை ஆயியின் முன் படித்தார். அப்போது பக்திமாலாவில் உள்ள பகவத் விஷயங்களை கேட்டு அழுதாள் பக்தியால் உருகிபோனாள்.

ஆயி மஹான்களுடைய சரித்திரத்தை கேட்கும்போது ஆயியின் தலையைச் சுற்றி ஒரு ஒளிதெரிவதை தீட்சித் கண்டு வியந்து போனார். சாயிநாதருடைய தர்பார் ராஜ தர்பாராக மாறியது. மாற்றியது நம் ஆயியே. இசையில் சுவை கொண்டோர், பாடகர்கள், பஜனை செய்வோர், நாட்டியம் ஆடுவோர், பலகலைகள் பெற்றோர் என ஒரு நாட்டு மன்னனிடம் தன் திறமையை காட்டி பாபாவிடம் இருந்து பரிசை பெறுவர். பாபா தன் அடியார்களிடமிருந்து பெரும் தொகையை தட்சணையாக பெற்றுக் கொண்டு, பெற்ற தொகையை மாலைக்குள்ளாகவே தர்மம் செய்துவிடுவார் பாபா.

பாபாவின் ராஜ்யத்திற்கும், பாபாவின் சனஸ்தானிற்கும் தேவையான ஆடம்பரமான பொருட்கள் இருந்தன. இனி ஆயியின் இலக்கு சாயி ராஜாவிற்கான குதிரை, பல்லக்கு, இரதம் இவைகளே ஆகும். பாபா ஆயியின் மனம் அறிந்து அருள்புரியவே செய்தார். பாபா தன் அடியவர்களை தன்னிடம் ஈர்த்து இழுத்தார். அடியவர்களின் மனோபீஷ்டத்தை ஆசைகளை நிறைவேற்றி வைத்தார். அடியார்களோ பாபாவிற்கு என்ன கைமாறு செய்வது என ஆயியிடம் சென்று பாபாவிற்கு தேவையானதை அறிந்து கொண்டு ஆயி கேட்பதை அனுசரித்து வாங்கித் தந்து நன்றிமிக்கவர்களாக இருப்பர்.

**(தொடரும்)**


எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

## "கூட்டுப்பிரார்த்தனை"

**உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்**
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

**கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.**

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

– வே.ஸ்ரீராம்

# சாய் சரிதம் - 12

## கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

**– ஸ்ரீ சீரடி சாய்பாபா**




திரு. நானாசாகேப் டேங்லே ஒரு முறை ஒன்பது அடி நீளமும், இரண்டடி அகலமும் கொண்ட ஒரு மரப்பலகையை மாட்டுவண்டியில் கொண்டுவந்து மசூதியில் இறங்கினார். எதற்காக இந்த பலகை என்று பக்தர்கள் அனைவரும் ஆச்சர்யமாகப் பார்த்தனர்.

பலகையை இறக்கிவைத்த நானாசாகிப் பாபாவிடம் சென்று வணங்கி, பாபா இந்தப்பலகையை தாங்கள் உறங்குவதற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார். நான் உட்பட அனைவரும் பாபா அதை தரையில் போட்டு அதன் மேல் படுத்துக்கொள்வார் என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால் பாபா யாருமே ஊகித்தறியாத ஒரு செயலை செய்தார்.

இற்றுப்போன கந்தல் துணிகளை ஒன்றாக்கி கயிறு போல் திரித்து பலகையின் இரண்டு புறங்களிலும் கட்டி அதை மசூதியின் உத்தரத்தில் ஒரு ஆள் உயரத்திற்கு உயர்த்தி கட்டி, பலகையின் நான்கு மூலைகளிலும் நான்கு மண்விளக்குகளை ஏற்றி வைத்து, அதன் நடுவில் படுத்திருப்பதாக பக்தர்கள் அதிசயமாகப் பேசிக்கொண்டார்கள்.

நானும் மற்றும் சிலரும் அந்த அதிசயத்தைப் பார்ப்பதற்கு மசூதிக்கு விரைந்தோம். அங்கு நாங்கள் கண்ட காட்சி எங்களை வியப்பின் உச்சிக்கே கொண்டு சென்றது. ஆம் பக்தர்கள் கூறியது போல் இற்றுப்போன கந்தல் துணி



எப்படி பாபாவின் எடையை தாங்குகின்றது. அதனால் பலகையின் எடையையே தாங்க முடியாதே! அது இருக்கட்டும். அவ்வளவு உயரமாக பலகையை எப்படி பாபா ஒருவரே உயர்த்திக் கட்டினார்?

அதுமட்டுமல்ல, பலகையின் நான்கு மூலையிலும் விளக்குகளை வேறு ஏற்றி வைத்துள்ளார். அப்படி இருந்தும் விளக்குகள் கீழே விழாமல் அதில் எப்படி ஏறி படுத்துறங்கினார். என்பதுபோன்ற பல கேள்விகள் எழுந்தது. எப்படியிருந்தாலும் இது பாபாவின் லீலையால் மட்டுமே சாத்தியமென்று எங்களுக்குப் புரிந்தது.

ஆனால் அன்றிலிருந்து, அந்த பலகையில் பாபா எப்படி ஏறி இறங்குகின்றார் என்பதைப் பார்க்க பக்தர்கள் பலவகையில் முயற்சி செய்து கொண்டே

இருந்தனர். நாளாக, நாளாக, கூட்டம் அதிகமாக ஆகியதே தவிர குறைந்தபாடில்லை. பக்தர்களின் தொல்லையை தவிர்க்க வேண்டி, ஒருநாள் பாபா அந்தப் பலகையை தன் கைகளினாலேயே துண்டு துண்டாக உடைந்து எறிந்து விட்டார்.

சூட்சும உலகத்தின் பலவித மான சித்திகள் பாபாவின் ஆணைகளுக்காக காத்திருந்தன. ஆனால் பாபா அவைகளை ஒரு போதும் பயன்படுத்திக் கொண்டதில்லை. இவ்வறிய விசேச குணத்தினால் சித்திகள் அனைத்தும் தாமாகவே அவரிடம் அடைக்கலம் புகுந்திருந்தன.

ஐந்தடி மூன்று அங்குலம் உயரமுள்ள பாபா சாதாரண மனிதனைப்போல் தோற்றமளித் தாலும், அனைவரின் இதயங்களிலும் அவர் வாழ்ந்தார். அவருடைய இயல்பு பந்தமற்றவராகவும், அக்கறையற்றவராக இருந்தாலும், வெளியில் அனைத்து உயிர்களின் நலத்தையும் விரும்பினார். இயல்பாய் பிரம்ம நிலையைப் பெற் றிருந்தாலும், வெளியே பிசாசைப் போன்று நடந்து கொண்டார்.

சில சமயம் அனைவரையும் பாசத்தோடு அரவணைத்தார். சில சமயங்களில் அவர்களை கற்களைக்கொண்டு தாக்கினார். பக்தர்களை சீரடியில் உள்ள ஆலயங்களுக்கு சென்று வரப் பணித்தாலும் அவர் எப்போதும் தன் ஆன்மாவிலேயே நிலைத்திருந்தார். அவர் ஒரு போதும் பிரயாணம் செய்யவில்லை. எப்போதும் ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கைகளில் சிறிய குச்சி ஒன்றை எப்போதும் வைத்திருந்தார்.

எண்ணங்களில் இருந்து முழுமையாக விடுபட்டவராக இருந்தார். செல்வத்தையும் புகழை யும் அவர் லட்சியம் செய்யாது பிச்சை எடுத்தே வாழ்ந்தார். "அல்லா மாலிக்" இறைவனே எஜமானன் என்று எப்போதும் கூறிக்கொண்டிருந்தார்.

சாயிபாபா ஓர் ஆத்மஞானச் சுரங்கம் ஆவார். அவரால் அவரி டம் இழுக்கப்பட்ட ஒவ்வொரு வரும் " தன்னையறிதல்" என்ற முழுமையான ஆத்மஞானப் பயிற்சியையே சாயிநாதரிடம் இருந்து பெற்றார்கள் என்பது கண்கூடு. தன்னைத்தவிர "எல்லாம் தெரிந்த" உபாசினியை நான்கு ஆண்டுகள் " சும்மாயிரு" என்று அடக்கி வைத்திருந்தது ஆத்மஞானம் அறிய வேண்டும் என்பதற்காக அல்லவா?

காரணம் அவர் பிரம்ம ஞானம் முழுமையாக நிரம்பப் பெற்றவராக இருந்தார். பாபாவின் தெய்வீகக்குணம் அத்தகையது. ஆகவேதான் பிரம்மத்தை அறிய வேண்டுமானால் ஆத்மாவை அறிய வேண்டும் என்று தன்னை நாடிவந்த அனைவருக்கும் ஆத்மானுபூதி பெற பயிற்சியளித் தார்.

உண்மையில் அறிவும், அதிர்ஷ்டமும் பெற்ற மக்கள் இந்த பொக்கிஷப் புதையலை பெற்றிருக்கின்றனர். சாயிநாத



ரின் உண்மையான மதிப்பை அறியாதவர்கள் அவரை ஒரு சாதாரண மனிதப் பிறவியாக கருதினார்கள். இப்போதும் கருது கின்றார்கள். அவர்கள் உண்மை யிலேயே பரிதாபத்துக்குரியவர்கள்.

பாபாவின் பிறந்தநாளையும், அவரது பெற்றோர்களையும் ஒருவரும் அறியார்கள். அவரது சீரடி வாசத்திலிருந்து அதை ஏறக்குறைய அனுமானிக்கலாம். அவர் 16 வயது பையனாக இருக்கும்போது முதன்முதலாக சீரடிக்கு வருகை தந்தார். மூன்றாண்டுகள் அங்கு தங்கியிருந்தார். பின்னர் திடீ ரென்று மறைந்துவிட்டார்.

சிறிது காலத்திற்குப் பின் ஔரங்காபாத்துக்கு அருகில் இருபது வயது மதிக்கத்தக்க வாலிபனாக தோன்றினார். மீண்டும் சீரடிக்கு சாந்த் பாடீலின் கல்யாண கோஷ்டியோடு திரும்பினார். பின்னர் அறுபது ஆண்டுகள் அவர் சீரடியிலேயே வாழ்ந்தார். அதில் இருந்து பாபாவின் பிறந்த வருடம் ஏறக்குறைய 1838 ஆக இருக்கலாம் என்று கணிக்கலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் (1608 – 1681) புகழ்பெற்று விளங்கிய மகான் இராமதாஸ் இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களிடம் இடையே இருந்த வெறுப்பை பெறுமளவு குறைப்பதற்கு முயற்சி எடுத்து அதில் வெற்றியும் பெற்றார். ஆனால் அவர் காலத்திற்குப்பின் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இரு வகுப்பினருக்கும் மீண்டும் வேற்றுமை அதிகரித்தது. அந்த வேற்றுமையை விளக்கி ஒற்றுமையை பலப்படுத்த இரு வரையும் இணைக்கும் பாலமாக சாயிபாபா விஜயம் செய்தார்.

பாபாவின் நிரந்தரமான உபதேசம் "ராமரும் ரஹீமும் ஒன்றே" அவர்களுக்குள் எள்ளள வும் வேற்றுமை இல்லை. அவர் களது அடியவர்கள் ஏன் சண்டை யிட்டுக் கொள்கின்றீர்கள். ஒருவருடன் ஒருவர் போராடி வாதிடுவது நல்லதல்ல. எனவே அடுத்தவருடன் போட்டி யிடாதீர்கள், வாதாடாதீர்கள். விவேகத்துடன் இணைந்து நடந்து கொள்ளுங்கள். கடவுள் உங்களை காப்பாற்றுவான். யோகம், தியாகம், தவம், ஞானம், என்பது கடவுளை

அறிய பயன் படும் வழிகள். இந்த வழிகள் ஒன்றின் மூலம் நீங்கள் வெற்றி பெறா விட்டால் உங்களது பிறப்பு வீணாகிவிடும். இதுவே அனைவருக்குமான பாபாவின் பொதுவான உபதேசமாகும்.

பல்வேறு வகையான உலக ஞானத்தை சொல்லிக்கொடுக்கும் பல திறமையான குருக்கள் இருக்கின்றார்கள். ஆனால் நம்மை நமது சத்தியமான ஆத்மாவில் நிலைபெறச்செய்து, நான் யார் என்பதை உணரவைத்து உலக வாழ்வென்னும் கடலை கடக்கச் செய்பவரே சற்குரு எனப்படுவர். அவரே நியத குரு. சாயிபாபா அத்தகைய சற்குரு ஆவார்.


அவருடைய பெருமையை விவரிக்க முடியாது. யாராவது பாபாவின் தரிசனத்திற்கு சென்றால் அவர் பாபாவிடம் கேட்காமலே அவரின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை உரைப்பார். எல்லா சீவராசிகளிடமும் அவர் தெய்வீகத்தைக் கண்டார். நண்பர்களும், பகைவர்களும் அவருக்கு ஒன்றே!

அவர் பரம்பொருள் என்று கூறுவதற்குண்டான அனைத்து கல்யாண குணங்களையும் கொண்டிருந்தார். அவர் கூறுகிறார், " நான் அடிமைகளுள் அடிமை. உங்களுக்கு கடன் பட்டவன். உங்களது தரிசனத்தில் திருப்தியடைகின்றேன். தங்களது திருவடிகளை தரிசிக்கும் பெரும் பாக்கியம் பெற்றேன். நான் தங்களது மலத்தில் நெளியும் புலு. அவ்விதமாகவே என்னை நான் ஆசீர்வதிக்கப்பட்டவனாக கருதுகிறேன் என்கிறார். எத்தகைய பணிவுடமை.

பாபா வெளிப்படையாக உணர்ச்சிவயப்பட்டவர் போல் தென்பட்டாலும், அவருக்கு அவைகளில் எள்ளளவும் சம்பந்தமில்லை. அவர் உண்டார் என்றாலும் சுவை அறியவில்லை. பார்த்தார் என்றாலும், பார்த்தவைகளில் விருப்பு, வெறுப்பை காட்டியதில்லை. காம உணர்வுகளைப்பற்றி யோசித்தால் சாயி அனுமனைப் போன்ற தூய பிரம்மச்சாரி ஆவார். எதன்பாலும் பற்றற்றவராக திகழ்ந்தார். சுருக்கமாக அவர் ஆசையற்றவர், கட்டற்றவர், முழு நிறைவானவர்.

இக்கூற்றை மெய்பிக்கும் நிகழ்வு ஒன்றை கூறுகின்றேன். கேளுங்கள் சீரடியில் நானாவலி என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் சித்தன் போக்கு, சிவன் போக்கு என்று வாழ்ந்து வருபவன். யாருக்கும் கட்டுப்படமாட்டான். பாபாவின் பக்தர்களின் பார்வையில் அவன் ஒரு விசித்திரமான மனிதன். அவன் பாபாவிற்கு சிறு சிறு வேலைகளை செய்து வந்தான்.

ஒரு முறை பாபாவின் முன்னால் நான் உட்பட அநேகர் கூட்டமாக அமர்ந்து பாபாவின் மொழிகளை கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது அங்கே திடீரென வந்த நானாவலி, பாபாவை நோக்கி ஏஞ்.சாயி நான் அங்கே உட்கார வேண்டும். நீ



எழுந்து கொள் என்று கட்டளை இடுவது போன்று சப்தமிட்டான். பாபா மறுபேச்சு பேசாது அவரது ஆசனத்தில் இருந்து உடனடியாக எழுந்து கொண்டார்.

உடனே நானாவலி பாபாவின் ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டான். பாபா அருகே நின்று கொண்டிருந்தார். சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு நானாவலி எழுந்து கொண்டு, பாபாவை நோக்கி இப்போது உட்கார்ந்து கொள் என்று கூறினான். பாபாவும் மீண்டும் எதுவும் பேசாமல் சென்று ஆசனத்தில் அமர்ந்தார். நானாவலி பாபாவின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு சென்று விட்டான்.

தனக்கு அடிபணிந்து சேவை செய்யும் ஒருவன் தன்னை அதிகாரம் செய்யும் போதும், தன்னை ஆசனத்தில் இருந்து வெளியேறச் சொன்னபோதும் கூட பாபா எள்ளளவும் வருத்தமோ, கோபமோ அடையவில்லை. என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதே நானாவலி பாபா சமாதியான பதிமூன்றாவது நாள் அவனும் சமாதியானான். அந்த அளவிற்கு பாபாவை நேசித்தான்.

வெளியே சாயி பாபா சாதாரண மனிதர் போன்று தெரிந்தாலும், அவரது செய்கைகள் அவரது அசாதாரண புத்தி சாதுர்யத்தையும், திறமையையும் வெளிப்படுத்தின. அவர் எதைச் செய்தாலும் அடியவர்களின் நன்மைக்காகவே செய்தார். அவர் தனது அடியவர்களுக்காக பிராணாயாமத்தையோ, வழிபாட்டு முறைகளையோ வகுத்துத் தரவில்லை. யார் காதிலும் எந்த மந்திரத்தையும் ஓதவில்லை.

எல்லாவிதமான புத்திசாலித்தனத்தையும் விட்டுவிட்டு எப்பொழுதும், சாயி, சாயி என்று உச்சரித்தீர்கள் என்றால் உங்களது கட்டுக்கள் எல்லாம் விடுபட்டு விடுதலை அடைவீர்கள் என்றார். நெருப்பின் முன்னால் அமர்ந்து யாகங்களும், பாராயணங்களும், அட்டாங்க யோகங்களும் ஒரு பிரிவினர் மட்டுமே செய்ய இயலும். மற்ற பிரிவினர்களுக்கு அதனால் எந்தவித லாபமும் இல்லை.

மனதின் இயல்பு நினைத்தல், எண்ணங்கள் இன்றி அது ஒரு நிமிடமும் இருக்க முடியாது. மனதிற்கு நீங்கள் என்ன கொடுக்கின்றீர்களோ அதைப்போன்றே மாறிவிடும். உலகப் பொருட்களை கொடுத்தால் அதைப்பற்றியே நிற்கும். குருவைக் கொடுத்தால் அது

குருவைப்பற்றியே எண்ணமிடும்.

அதேப்போன்று மிக்க கவனத்துடனும், விருப்பத்துடனும் சாயியின் கதைகளைக் கேட்ப்பதுவே வழிபாடும், கீர்த்தனைகளும் ஆகும். சாயிபாபாவின் கதைகள், உலக வாழ்க்கையின் பயத்தை அழித்து உங்களை ஆன்மீகப்பாதைக்கு அழைத்துச் செல்கின்றன. எனவே இக்கதைகளை கேளுங்கள், தியானியுங்கள்.

இம்முறை பின்பற்றப்பட்டால் அனைத்து சீவராசிகளும், உயர்த்தப்பட்டோரும், தாழ்த்தப் பட்டோரும் புனிதமடைவர். நீங்கள் உங்களது கடமைகளை செய்து கொண்டே மனதினை சாயிபாபாவின் கதைகளுக்கு அளித்துவிடுங்கள். அவர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார். இதுவே மிகவும் எளிய வழியாகும்.

இருப்பினும் அனைவரும் ஏன் இந்த வழியை பின்பற்றவில்லை. கடவுளின் அருள் இன்றி சாதுக்களின் கதைகளை கேட்கும் ஆர்வம் நமக்கு வருவதில்லை. சாதுக்களின் கதைகளை கேட்பது என்பது நாம் அவர்களோடு சத்சங்கம் செய்வதைப் போன்றது. அவர்களின் தொடர்பால் நாம் நமது உடல் உணர்வையும், அகங்காரத்தையும் அகற்றி பிறப்பு, இறப்பு என்னும் சங்கிலித்தொடர்ச்சியை அறவே அழிக்கின்றது.

இதயத்தில் இருக்கும் கர்ம முடிச்சுக்களை எல்லாம் அழித்து விட்டு, தூயதான கடவுள் சிந்தனையை நிரப்பிவிடும். இன்ப துன்ப உணர்வுகளை லட்சியம் செய்யாதவாறு நம்மை ஆன்மீகப்பாதையில் மேன்மேலும் நம்மை அழைத்துச் செல்கின்றது.

நாமஸ்மரணம், வழிபாடு, அல்லது பக்தி மார்க்கத்தின் சாதனைகள் உங்களிடம் இல்லை என்றாலும், சாதுக்களிடம் முழு மனதுடன் சரணாகதி அடைந்தீர்கள் என்றால் இவ்வுலக வாழ்க்கை என்னும் கடலுக்கு அப்பால் அவர்கள் நம்மை பத்திர மாக அழைத்துச் செல்வார்கள்.

இக்காரணங்களுக்காகவே சாதுக்கள் உலகில் தோன்றுகின்றார்கள்.

உலகின் பாவங்களை அடித்துச் செல்லும் புண்ணிய நதிகளே, சாதுக்கள் தங்களிடம் வந்து தீர்த்தம் ஆட வேண்டும் என்றும் அதன் மூலம் தாங்கள் புனிதப்படுத்தப் படுவோம் என்றும் விரும்புகின்றன. சாதுக்களின் பேராற்றல் அத்தகையது. முற்பிறவியில் நாம் செய்த நற்செயல்களால் நாம் சாயி நாதருடைய திருவடிகளை அடைந்திருக்கின்றோம்.

அத்தகைய சுந்தரமான அழகு படைத்த சாயி மசூதியில் நின்று கொண்டு, பக்தர்களின் நன்மையை கருதி ஒவ்வொருவருக்கும் “உதி” யை பிரசாதமாக கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். இவ்வுலக நிலையாண்மையை கவனத்தில் கொண்டு எப்போதும் பரமானந்தத்தில் திளைக்கும் அவர் முன்னால் வீழ்ந்து வணங்கு வோமாக!

**தொடரும்**

# பட்டினத்தார் ஞானம்

உணவை தான் சாப்பிட்டேன் எப்படி மலம் ஆனது? உயிரோடு தானே இருந்தேன் எப்படி இறந்து போனேன்? மலம் தான் உணவாக இருந்ததா? மரணம் தான் வாழ்வாய் இருந்ததா? இந்த சுருங்கி போன உடம்புதான் இதுவரை இளமையை அனுபவித்ததா? இந்த சுருங்கும் மார்புகளுக்கா இத்தனைக் கண்கள் வட்டமிட்டது? பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும் என்று பாடியது இந்த நிலையற்ற பொய் வாழ்வைத்தானா?

இன்னும் இழுத்து கொண்டு இருக்கிறான். செத்து தொலையவில்லையே என்று மனைவியும் சுற்றமும் பேசிய போது, என்னை நூறாண்டு வாழ்க! என வாழ்த்தியது நினைவுக்கு வந்தது. இதுவரை எனது கோடாரியால் நான் எனது வேரையல்லவா வெட்டியிருக்கிறேன். நான் விரும்பியவை எல்லாம் என்னை வெறுத்து கொண்டிருக்கின்றன. இளமையாய் இருக்கும் போதே முதுமையை பழகி இருக்கவேண்டும். அறுசுவை உணவை தேடி தேடி உண்ணும் போதே அது மலமாகும் என்று உணர்ந்திருந்தால், அடுத்தவர் உணவை நான் பறித்திருக்கமாட்டேன்.

அனைவருக்கும் பயன்பட வேண்டிய பொன் பொருளை ஒரு திருடனைப்போல் பதுக்கி இருக்கமாட்டேன். காலம் கடந்த ஞானம். பாயும், நோயும் தவிர யார் துணைக்கு வரப்போகிறார்கள். இறந்தாலும் எனக்காக யார் அழப்போகிறார்கள்? பிணமானப் பின் இந்த மாளிகையும் பணமும் எனதென்று நான் சொந்தம் கொண்டாடவா முடியும் சந்தனத்தால் மணந்த உடல் என்றாலும் இறந்தால் மணக்கவாப் போகிறது? கண்ணே மணியே என்று கொஞ்சிய தாயும், என் உயிரே என்று சொன்ன மனைவியும் பிணமானபின் உடன் வரப் போகிறார்களா என்ன?



பிரியமாட்டேன் என்று சொன்னவர்கள் பிணம் என்று வீசி சென்றப் பிறகு, மண் என்னைப்பார்த்து, "மகனே! நானிருக்கிறேன். என் மடியில் வந்து உறங்கு" என்று என்னை மார்போடு தழுவிக்கொண்டது. அருந்தின மலமாம் பொருந்தின அழுக்காம் வெறுப்பன உவப்பாம் உவப்பன வெறுப்பாம் உலகே பொய் வாழ்க்கை. நீ நீயாக இரு. உங்கள் உடலில்

இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் நீங்கள் உயிருடன் இருக்கும் அத்தனை நாளும் பயன்படுத்தவே படைக்கப்பட்டிருக்கிறது.

வயதானால் அந்த நோய் வரும், இந்த நோய் வரும் என்று சொன்னால் தயவு செய்து நம்பாதீர்கள். உங்கள் கூடவே வாழும் மிருகங்களைப் பாருங்கள். மரணம் வரும் வரை தன் வேலைகளைத் தானே செய்து கொள்கிறது. எந்தப் பறவைகளும் தனக்கு வயதாகி விட்டது என்று தன் குஞ்சிடம் உணவு கேட்பதில்லை. எந்த மாடும் படுத்து கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ, உணவோ கேட்பதில்லை. எந்தப் பூனையோ, நாயோ படுக்கையில் இருந்து கொண்டு மலம் கழிப்பதில்லை.

மரணம் அடையும் நாள் வரை ஆரோக்கியமாக சுயமாக தன் வேலைகள் அனைத்தையும் செய்து கொள்கின்றன. மனிதர்கள் மட்டும் தான் வயதானால் நோய்வரும், இயலாமை வரும் என்று நம்பி அடுத்தவர்களை எதிர்பார்த்து வாழ ஆரம்பிக்கிறார்கள். நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். முதுமை என்று எதுவும் இல்லை. நோய் என்று எதுவும் இல்லை. இயலாமை என்று எதுவுமில்லை. எல்லாம் உங்கள் மனதிலும், அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது.

சிந்தனையை மாற்றுங்கள். ஆரோக்கியமாக வாழுங்கள். நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதுவாகவே ஆகிப் போகிறீர்கள். நான் சம்பாதித்தேன், நான் காப் பாற்றினேன், நான் வீடு கட்டினேன்.

நான் உதவி செய்தேன், நான் உதவி செய்யலனா? அவர் என்ன ஆகுறது! நான் பெரியவன், நான் தான் வேலை வாங்கி கொடுத்தேன்.

நான்.. நான்.. நான்.. என்று மார்தட்டி கொள்ளும் மனிதர்களே!

நான் தான் என் இதயத்தை இயக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா? நான் தான் என் மூளையை இயக்குகிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா? நான் தான் என் இரண்டு கிட்னியையும் இயக்குகிறேன் என்று சொல்ல முடியுமா? நான் தான் என் வயிற்றில் சாப்பிட்ட உணவில் இருந்து சத்துக்களை தனியாக பிரித்து இரத்தத்தில் சேர்க்கிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?

நான் தான் பூக்களை மலர வைக்கிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா ?

இவைகள் அனைத்தையும் எவன் செய்கிறானோ, இயக்குகிறானோ அவன் ஒருவனுக்கே "நான்" என்று சொல்வதற்கு முழு அதிகாரமும், உரிமையும் உண்டு. ஆகையால் நான் என்ற அகந்தையை விட்டு அனைவரிடமும் அன்பாக இருங்கள். உனக்கு மேலே உள்ள வனைப் பார்த்து ஏங்காதே, தாழ்வு மனப்பான்மை வரும். உனக்கு கீழே உள்ளவனை ஏளனமாய் பார்க்காதே, தலைக்கனம் வரும்.

உன்னை யாரோடும் ஒப்பிடா மல் நீ நீயாக இரு. தன்னம்பிகை தானாய் வரும். ●

# SoundzGood

Music at its best...



TRUE TO OUR NAME EVERYTIME SOUNDS GOOD!!!

**SPREADING HAPPINESS**

- Live Instrumental
- Vocal and Instrumental
- Carnatic and all genres





**BOOK NOW**

9566167680 / 9003120624

WWW.SOUNDZGOOD.IN

46, Rajiv Gandhi salai OMR

# குருவிடம் இருந்து கற்றதும் பெற்றதும்



கடந்த 26.01.25 அன்று நடைபெற்ற ஆன்லைன் வகுப்பில் முட்டாளாக்கும் முட நம்பிக்கைகள், என்ற தலைப்பில் நமது குருஜி யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் நிகழ்த்திய சத்சங்கமும், கேள்வி பதிலும் தொகுத்து தந்திருக்கின்றேன். வாசகர்கள் படித்து பயன்பெறுவார்களாக!

நிலவின் அழகு மற்றும் அதன் அமைப்பும். நாம் நம்பியது வேறு ஆனால் உண்மையில் வேறு என்பதன் மூலம் உறையை தொடங்கினார் குருஜி. மேலும், ராஜாவும் இரண்டு காக்கைகளும் கதை மூலம் நமக்கு மூட நம்பிக்கை எதுவென்று தெளிவு படுத்தினார் .

எல்லாவற்றிலும் கடவுளை பார்ப்பது நம்பிக்கை. கோவிலில் மட்டும் கடவுள் இருக்கின்றார் என்று நம்புவது மூட நம்பிக்கை. கடவுள் தன்மை என்பதே நம்பிக்கை. எதையும் ஏன், எதற்கு என்று பகுத்து அறிந்து தெளிவு கொள்வது சிறந்தது என்றும் கூறினார்.

இன்றைய தலைமுறை எதையும் தெளிவு கொள்ளாமல் நம்புவது இல்லை. இன்னும் வளரும் தலை முறையில் இத்தகைய தெளிவு அதிகம் ஆகும். மாற்றம் ஒன்றே மாறாதது. “கடவுள் என்றால் இறந்த காலம், கடவுள் தன்மை என்பதே நிகழ் காலம்”. எனவே கடந்த காலம் மற்றும் எதிர்காலம் குறித்த நம்பிக்கை விட்டு நிகழ் காலம் எனும் உண்மைக்கு வருவோம்.



கௌரி, பெங்களூர்.

உதாரணம்: நாம் கை பையில் பல குப்பைகளை அடைத்து வைப்போம் எடுக்க எடுக்க வரும் அதுபோல அல்லாது மனதை பல தேவை இல்லாத எண்ணங்களால் குப்பை ஆகாமல் அன்றைக்கன்றே தூய்மை செய்தல் வேண்டும். எப்படி காந்தம் இரும்பை இழுக்குமோ அதுபோல் நாம் நம் உடலையும் மனதையும் அண்டத்தில் உள்ள நேர்மறை அதிர்வுகளை தியானத்தின் மூலம் உள் வாங்கிகொண்டு மனதை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி பதில் மூலம் குரு அவர்கள் நமக்கு அளித்த முத்துக்கள்

ஒரு சில கலாச்சார பழக்க வழக்கங்கள் முன்னோர்கள் நமக்கு அளித்தது பின்பற்றுவது வேறு



அதுவே நமக்கு ஒருசில காரணங்களால் செய்ய முடியாமல் போனால் அதன் பொருட்டு பதட்டம் கவலை அடைந்தால் அது மூட நம்பிக்கை உதாரணமாக மொட்டை அடித்தல், பற்றி கூறி தெளிவித்தார்.

ஜாதகம் பற்றிய கேள்விக்கு வான் சாஸ்திரம் உண்மை. ஆனால் அதை தொழில் முறையாக செய்ய பல ஆழ்ந்த அறிதல் முக்கியம் அது யார் முறையாக செய்கிறார்கள் என்பது தெரியாது. நாம் போகவில்லை எனில் அவர்கள் தொழில் இல்லை அதற்காக வேண்டுமானால் போகலாம் என்று கூறி ஜாதகம் பார்த்து செய்யும் திருமணம் சரி பார்க்காமல் செய்யும் திருமணமும் சரி இரண்டு வகையிலும் வெற்றி தோல்வி உள்ளது என்று உதாரணம் மூலம் விளக்கினார்.

மதம் பற்றிய கேள்விக்கு அன்பை போதிக்கும் வரை சரி வெறுப்பை போதித்தால் அது அவசியமில்லை எனக் கூறினார். கர்மா பற்றிய கேள்விக்கு நாம் தான் கர்மாவை உருவாக்குகிறோம் எதிலும் எதிர்பார்பில்லாமல் செய்தால் சத் கர்மா, எதிர்பார்க்கும் பொழுது அது துர் கர்மா.

குடும்ப வழி வரும் பூஜை செய்வது பற்றிய கேள்விக்கு அழகாக விளக்கமாய் நாம் சிறு வயது முதல் வயதான வரை எவ்வாறு கோவில், பூஜை நம் சந்தர்ப்ப சூழ்நிலை உடல் நிலை எல்லாம் கருதி அதற்கேற்றவாறு மாற்றி செய்கிறோம் , என்பதை புரிய வைத்து, அனுபவமே ஆன்மீகம் அதைப் புரிந்து கொள்வதே ஆன்மீகம். என்று கூறினார்.

இறுதியில் திவசம் பற்றிய கேள்விக்கு வள்ளலார் கூறியதை மிக அழகாக எடுத்துரைத்தார் நம் உடல் இறந்த பின்பு என்ன ஆகின்றது என்று விளக்கினார். அதை அறிந்தவுடன் கேள்விக்கு பதில் புரிந்தது.

தவிர உருவ வழிபாடு பற்றி கூறுகையில் 2000 ஆண்டுகளுக்கு முன் உருவ வழிபாடு இருந்ததில்லை. நம் வேத காலத்தில் அருவமே பிரஹ்மம் என்று உள்ளது. இப்ராஹிம் ,முஹம்மது நபி அவர்கள் பற்றி கூறியும், தொல் பொருள் ஆய்வு பற்றி கூறியும் தெளிவித்தார்.

ஒரு தலைப்பில் பல ஞானம் கற்பித்த நம் குரு யோகி ஸ்ரீராம் பாபா தியானதுடன் சத்சங்கத்தை நிறைவு செய்தார்.

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன் குரு வாழ்க குருவே துணை..

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
அற்புத ஆன்மீகப் பயிற்சி

# ஆத்ம ஞானம்

(உன்னையே நீ அறிவாய்)

மானுட வாழ்வின் ஒட்டுமொத்த பிரச்சனைக்கும் ஒரே தீர்வு தன்னையறிதல்
வாய்ப்பேச்சில் ஒன்றுமில்லை, இணைந்திடுவீர் இக்கணமே!



- தீராத உடல் நோய், மன நோயில் இருந்து விடுதலை.
- ஆரோக்கியம், ஆனந்தம்,
- தொழில் வெற்றி,
- குடும்ப நிம்மதி,
- தெய்வீக அதிர்வுகள்.


விபரங்களுக்கு,

**சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்,**

9/1A, பழனியப்பா 2 வது தெரு, அயனாவரம், சென்னை–23.

9941816692 , 8825831068






**யோகி ஸ்ரீராம் பாபா**
அவர்கள் எழுதிய
அற்புதமான
ஆன்மீகத் அனுபவத்
தேடல்கள் நிறைந்த
**"குருவைத்தேடி"**
நூல் விற்பனையில்
உள்ளது. தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-
(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

## சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் "மயிலை சிவஞான நடராஜ சுவாமிகள்" சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

# மயிலை சிவஞான நடராஜ சுவாமிகள்

நமது மயிலை சிவஞான நடராஜ சுவாமிகள் 1896 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமி அன்று பிறந்தார். 19 வது வயதிலேயே ஞானத்தை தேடி பயணம் செய்தார். சென்னை, ஓட்டேரியில் எம்ப்ராய்டரிங் வேலையைச் செய்து வந்தார். குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை முழுவதுமாக கற்க முடியவில்லை அதனால் தையல் வேலையை செய்து வந்தார்.

ஒரு நாள் சாமியார் ஒருவரை சந்தித்து தனது ஞானத் தேடல் பற்றி கூறினார். அதற்கு அந்த சாமியார், இந்த உடல் வலிமை, தற்போதுள்ள மனவலிமை எல்லாம் காலத்தால் மாறும். ஆனால் ஞானத்தில் ஆத்ம நிலைதான் உண்மை யானது என விளக்கினார். ஆத்ம ஞானமே நம்மை இறைநிலைக்கு கொண்டு செல்லும் என்று கூறினார். இதை கேட்ட நடராஜ சுவாமிகள் வீட்டிற்கு வந்துவிட்டார். ஆனால்



திரு மயிலை நடராஜ சுவாமிகள்
ஸ்தாபகர், திருமயிலை நடராஜ சுவாமி சித்தர்களாக பன்னிரு நிலையம்

சாமியார் கூறிய வார்த்தைகள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

மறுநாள் அந்த சாமியாரை ஓட்டேரி சுடுகாட்டில் சந்தித்து

ஆத்ம வித்தையை சொல்லித் தரும்படி கேட்டார். மறுநாள் வா என்றார் சாமியார். மறுநாள் சென்று சுவாமிகளைத் தேட அவர் அங்கு இல்லை. பலரிடம் கேட்டார் அது போல் எந்த சாமியாரையும் நாங்கள் பார்க்கவில்லை என்ற னர். அன்று முதல் தனது ஞான தேடுதலை தீவிரமாகத் தொடந்தார்.

இதற்கிடையில் பெற்றோர் களின் வற்புறுத்தல் காரணமாக கமலம்மாள் என்ற மங்கையை தனது 22 வது வயதில் திருமணம் செய்து கொண்டார். குருமார் களிடம் சித்த வைத்திய முறைகளை கற்றுக் கொண்டு சித்த வைத்தியராக திகழ்ந்தார்.

தனது ஞான தேடல் பயணத்தின் போது தஞ்சாவூரில் யோகானந்தர் சுவாமிகளை சந்தித்து தான் கற்ற பயிற்சி முறைகளை தெரிவித்தார். அதைக் கேட்ட யோகானந்த சுவாமி, தன்னுடைய பயிற்சி வழிமுறைகளையும் இணைத்து அவற்றை ஒழுங்குபடுத்தி பயிற்சி எடுக்க சொன்னார். நடராஜ சுவாமிகளும் 20 நாட்களில் பயிற்சி எடுத்து நல்ல சீடராக திகழ்ந்தார்.




பிறகு சென்னை வந்த அவருக்கு நிறைய சீடர்கள் உருவாகினர். நடராஜ சுவாமிகள் தனது 60 வயதில் தனது ஆத்மாவை இறை ஒளியாக்கும் சித்தி நிலையை கற்றுத் தேர்ந்தார். இதைக் கண்ட சத்சங்க அமைப்பு ஒன்று "சிவஞான" என்ற பட்டத்தை கொடுத்து சுவாமிகளை கௌரவபடுத்தியது.

சுவாமிகள் ரசவாதத்தில் தங்கம் செய்யும் முறையை கற்றுத் தேர்ந்தார். இந்த முறை ஞானத்தை தேட தடையாக இருக்கும் என்று எண்ணி தங்கம் செய்யும் முயற்சியை கைவிட்டார். இப்படி அவர் ஞான வாழ்வில் தன் ஆன்மாவை முழு இறை ஒளியாக்கியதால் சித்தராக உருவானார். நடராஜ சுவாமி பல சீடர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் விதிகளையும் தள்ளி போட்டுள்ளார். சீடர்களின் குடும்பம், தொழில், உடல் நோய் கள் போன்றவற்றை சரி செய்து உள்ளார்.

உடல் இச்சை, பொருள் இச்சைகளை கட்டுப்படுத்த கூடிய பயிற்சிகளை சீடர்களுக்கு சொல்லிக் கொடுத்தார். மக்களுக்கு சேவை செய்ய 1970 ல் வில்லிவாக்கத்தில் சித்த யோக பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்து சீடர்களுக்கு பயிற்சி கொடுத்து வந்தார். பிறகு பெரவள்ளூர் செல்லியம்மன் கோவில் திடலில் வந்து

மனைவியுடன் தங்கி பயிற்சி நிலையத்தை நடத்தி வந்தார்.

1978 ல் மார்ச் மாதம் "திருமயிலை சிவஞான நடராஜ சுவாமிகள் சித்தயோக பயிற்சி நிலையம்" ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வாசியோகமும், மனவலிமைக்கு நிஷ்டை என்ற பயிற்சியும் தரப்பட்டது.

நாட்டில் பல சித்தர்கள் சமாதிகளில் வழிபாட்டு முறைகள் தான் உள்ளது. இங்கும் அது போல வேண்டாம் என்று முடிவு எடுத்து பயிற்சி நிலையமாக துவக்கினார். நடராஜ சுவாமிகள் சமாதி அடைந்தால் அவரை சமாதி செய்ய ஓர் இடம் வேண்டும் என்று எண்ணி அவரது சீடர்கள் சுவாமிகள் வாழ்ந்த வீட்டின் அருகே 1978 ல் நவம்பர் மாதம் ஓர் இடம் வாங்கினார்கள்.

பல ஆத்ம சீடர்களை உருவாக்கிய நடராஜ சுவாமிகள் 1987 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ம் தேதி மோட்ச சமாதி நிலையை அடைந்தார். சீடர்கள் வாங்கிய இடத்தில் சுவாமிகளை சமாதி வைத்தனர் அவருடைய பக்தர்கள். இன்றும் இவருடைய சமாதி பீடத்தில் வழிபாட்டு முறைகள் கிடையாது. ஞான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. ஞானத்தை தேடுபவர்களுக்கு இந்த இடம் ஓர் வரபிரசாதம் ஆகும். கடந்த 18-2-25 அன்று 38 வது குரு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

**சீவ பீட முகவரி:-** திருமயிலை சிவஞான நடராஜ சுவாமிகள் சீவ பீடம், எண்: 4, செல்லியம்மன்




கோவில் மெயின் தெரு, ராம் நகர், பெரவள்ளூர், சென்னை – 82.

**ஆலயம்:-** செவ்வாய், வியாழன், சனிக்கிழமை மட்டும் திறந்திருக்கும்.

**பேருந்து வசதி:-** சென்னை – கோயம்பேடு – ரெட் ஹில்ஸ், 170 சி தடம் எண்.

**இறங்கும் இடம்:-** கொளத்தூர் டான்பாஸ்கோ பள்ளி, சென்னை – பாரிமுனை – திரு.வி.க நகர், சென்னை – கோயம்பேடு – திரு.வி.க நகர்

**இறங்கும் இடம்:-** திரு.வி.க. நகர் பேருந்து நிலையம், (இங்கிருந்து அருகில் உள்ள பெரவள்ளூர் ராம் நகருக்கு ஆட்டோ மூலம் செல்லலாம்)

**மின்சார இரயில் வசதி:-** சென்னை கடற்கரை – திருவள்ளூர்

**இறங்கும் இடம்:** பெரம்பூர் இரயில் நிலையம். இங்கிருந்து பெரவள்ளூர் ராம் நகருக்கு ஆட்டோ மூலம் செல்லலாம்.

ஆத்ம நன்றிகள்.

# குருவுடன் மூன்று நாள் பயணம்



நமது குரு யோகி ஸ்ரீராம்பாபா அவர்களின் குரு பூஜ்ய ஸ்ரீ ராமாசாது அவர்களின் 130 வது ஜெயந்தி விழா குடந்தை, கொட்டையூர் சாதனா நிகேதன் ஆசிரமத்தில் நடைபெறும் விழாவிற்கும் கோவை உத்சவ் பிரசாந்தியில் குருவின் "ஆத்மஞான" சத்சங்கமமும் நடைபெற இருப்பதால் இரு நிகழ்சியிலும் கலந்து கொள்வதற்காக குருவுடன் மூன்று நாள் பயணமாக நண்பர் பாலாஜியுடன் நானும், திரு. இராஜசேகர் அவர்களும் பயணிக்க ஆயத்தம் ஆனோம்

11.02.2025 அன்று காலை 5.00 மணியளவில் புறப்பட்டு மதியம் 2.00 மணிக்கு கோவை சென்றடைந்தோம். மறுநாள் 12.02.2025 காலை குருவின் சொற்பொழிவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரமாண்ட அரங்கினில் மெத்த படித்தவர்கள் அமர்திருந்தனர். குரு தனது "ஆத்மஞான" சத்சங்கத்தை தொடங்கினார். நேரம் செல்ல செல்ல அமர்திருந்தவர்களை அமைதி கவ்வியது குருவின் ஒவ்வொரு சொல்லும் அவர்களை வேறொரு கோணத்தில் சிந்திக்க வைத்தது.

அதை இருக்கையின் நுனியில் அமர்ந்து கவனித்ததை வைத்து எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது. சத்சங்கம் முடிந்தும் தியானம் எப்போது தொடங்கும் என்று அமைதி காத்திருந்தது தொடங்கியதும் அரங்கத்தையே அமைதி கவ்விக் கொண்டது. தியானம் முடிந்ததும் அவரவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். மேலும் சிலர் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளை கேட்டு ஆசியும் பெற்றனர்.

மதிய உணவிற்காக கேன்டீன் சென்றபோது அனைவர் நாவும் குருவின் சத்சங்கத்தைப் பற்றியே கிசு கிசுத்ததை எங்களால் கேட்க முடிந்தது.

இதே நிகழ்சி மாலை 4.00 மணிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் முன்பைவிட ஆர்வமாக காத்திருந்தனர். ஆனால் காலையில் நடைபெற்றது போல் அல்லாமல் குரு வேறொரு கோணத்தில் அவர்களிடம் ஆத்மஞான சத்சங்கம் செய்து குழப்பத்தில் தள்ளினார். அக்குழப்பதிலிருந்து வெளிவர ஒவ்வொருவராக கேள்விகளை கேட்க வைத்தார். அவற்றிற்கு விளக்கம் அளித்ததை அனைவரும் ஆச்சர்யத்தோடு கேட்டு மகிழ்ந்தனர். சுவாரஸ்யம் சிறிதும் குறையாமல் கேள்வி பதில் நடைபெற்றது இறுதியாக தியானம் மற்றும் ஆசி வழங்கி நிகழ்சியை முடித்து வைத்தார்.




**சொ. அகஸ்டின்**

மறுநாள் 13.02.25 தனி தனியாக ஆலோசனை பெறுவதிலும் ஆசி பெறுவதிலும் மும்முரம் காட்டியதால் காலை 11.00 மணிக்கு நிகழ்சி தொடங்கப்பட்டது. மேலும் குரு அவர்கள் குடந்தை செல்வதை புரிந்து கொண்ட நிர்வாக குழு மதியம் 1.00 மணிக்கு நிகழ்சியை முடித்துக்கொண்டனர். அதை தொடர்ந்து Association சார்பாக குருவிற்கு பொன்னாடை போர்த்தி உரிய மரியாதை செலுத்தி, ஆசி பெற்று வழியனுப்பி வைத்தனர். அவற்றை ஏற்றுகொண்ட குரு அவர்கள் அனைவருக்கும் மன மார்ந்த வாழ்த்துகளை சொல்லி விடைபெற்றார்.

கோவையிருந்து புறப்பட்டதும் ஒரு சில மணி நேரங்களில் குருவின் கைபேசி ஒலித்தது திரு.நாராயணன் அவர்கள் குடந்தை ஆசிரமத்திற்கு எப்போது வருவீர்கள் என்று கேட்டு அறிந்தார். இரவு 8.00 மணிக்கெல்லாம் வந்துவிடுங்கள் என்றார் ஆனால் நாங்கள் செல்வதற்கு இரவு 11.00 மணி கடந்தவிட்டது. அந்நேரத்திலும் நமது குருவை வரவேற்க ஆசிரம காப்பாளர் வழிமேல் விழி வைத்து காத்திருந்தார்.

குருவை கண்டதும் முக மலர்ந்து நமஸ்காரம் செய்து ஆகாரம் அளிக்க ஆயத்தம் ஆனார் நாங்கள் வரும் வழியில் உணவருந்திவிட்டோம் என்பதை அவரின் மனம் நோகாமல் குரு எடுத்துக்கூறினார். பரவாயில்லை முதலில் ஓய்வெடுங்கள் மற்றதை காலையில்

பேசிக்கொள்ளலாம் என கூறிக்கொண்டே ஆசிரமத்தில் தனி அறை ஒதுக்கப் பட்டிருந்ததை காண்பித்து இங்கு படுத்துறங்குங்கள் நாளை காலை சந்திப்போம் என கூறி சென்றார்.




காலை 4.00 மணிக்கு வள்ளலாரின் அகவல் பாராயணம் ஒலி பெருக்கியின் மூலம் ஒலித்தது நாங்கள் எழுவதற்கு முன்பே குரு புறப்பட்டு தயாராக இருந்தார். காலை கடன் முடித்து குளித்துவிட்டு 6.00 மணிக்கு கிளம்பி வெளியே வந்து பார்கிறோம். ஓர் சிறார் பட்டாளமே பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தனர்.

ஆசிரமத்தில் தங்கி பயின்று வரும் மாணாக்கர்கள் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது ஆசிரமத்தில் ஒழுக்கம் எவ்வாறு பயிற்று விக்கப்படுகிறது என்பதையும் பார்க்க முடிந்தது. அவர்கள் அனைவரின் நெற்றியிலும் திருநீறு அலங்கரித்திருந்தது. அவ்வை பிராட்டி சொன்ன "நீரில்லா நெற்றி பாழ்" என்ற ஒற்றை வரி நினைவுக்கு வந்தது.

நமது குருவின் குருவான பூஜ்ய ஸ்ரீ ராமாசாது அவர்களின் குரு பூஜை நிகழ்சி தொடங்கியதும் ஆசிரமத்தால் இயங்கப்படும் மேல் நிலை பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் சீடர்கள் என அவர்களே முன்னின்று அகவல் படிப்பதும் பூஜை செய்வதும் காலை சிற்றுண்டி பரிமாறுவதும் என அனைத்து வேலைகளையும் அவர்களாகவே முன்னின்று செய்தை என்னால் மறக்க இயலாது.

பூஜை தொடர்ந்து நடைபெற வெளியே இருந்து பொது மக்களும் வி.ஐ.பி களும் வந்த வண்ணம் இருந்தனர். திரு. நாராயணன் அவர்கள் வந்ததும் நமது குருவிடம் ஆசி பெற்று மதிய உணவிற்கு அணைக்கரையில் அமைந்துள்ள எமது இல்லத்திற்கு வரவேண்டும் என மிக பணிவுடன் வேண்டுகோள் வைத்தார்.

அவரின் விருப்பத்தை நிறைவேற்ற குரு இசைந்தார். காலை 12 மணிக்கு அணைக்கரை புறப்பட்டோம். குருவின் வருகையை எதிர்பார்த்து நாராயணன் குடும்பத்தார் காத்திருந்தனர். மதியம் 1 மணிக்கு அவரது இல்லம் சென்றோம் குருவை கண்டதும் திரு.நாராயணன் குடும்பத்தார் மலர்கள் பூத்து குலுங்கியது போன்று முகமலர்ந்து வரவேற்றார்கள்.

குறிப்பாக அவரின் தாயார் சுமார் 85 வயது மதிக்கத்தக்க முதியவர் நிமிர்ந்து நடக்க முடியாத சூழலில் அமர்ந்த நிலையிலேயே குருவை வரவேற்றார். குருவிற்கு பாத பூஜை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அம்மா ஒவ்வொன்றாக சொல்ல மகன் நாராயணன் அதன்படியே செய்தார் வீட்டில் உள்ள அனைவரும் குருவிற்கு பாத பூஜை செய்து ஆசி வாங்கி சென்றனர். இறுதியாக தாயார் அவர்கள் நடக்க முடியாத சூழலிலும் மெல்ல அடி மேல் அடி வைத்து முனுமுனுத்தபடி பாதபூஜை செய்தார்கள். என் செவிகளை தீட்டி கூர்ந்து கவனித்தேன். எங்கள் வீட்டிற்கு பாபா வந்துவிட்டார், பாபா வந்து விட்டார் எனக் கூறிக் கொண்டே பாத பூஜை செய்தார்.

தயார் நிலையில் வைத்திருந்த உணவு தலைவாழை இலையில் பரிமாறப்பட்டது தேவைக்கு அதிகமாகவே சாதமும் கூட்டு பொறியலும் பரிமாறப்பட்டது அவர்களுடைய உபசரிப்பும், அன்பும் குருவிற்கும், எங்களுக்கும் ஆனந்தம் அளித்தது. உணவிற்குப் பின் திரு. நீலவண்ண நாராயணன் அவர்கள் குருவை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார்.

அங்கு ஒரு அடியில் ஜம்பொன் சிலை ஒன்றை காண்பித்து அதை தூக்கி பாருங்கள் என்றார் குருவும் தூக்கிப் பார்த்துவிட்டு மிக கனமாக இருக்கிறது என்றார். இந்த சிலை 25 ஆண்டுகளுக்கு முன் தவத்திரு ராமதாஸ் அண்ணா அவர்கள் கொடுத்ததை நினைவு கூர்ந்து அதே ஆண்டு இங்கு வந்து அண்ணா மதிய உணவு சாப்பிட்டதையும் பாத பூஜை செய்ததையும் பகிர்ந்து கொண்டார். இன்று உங்களை கண்டது அவரை காண்பது போலவே இருந்தது அவராகவே காட்சி அளிக்கிறீர்கள் என்றும் கூறினார்.

குரு சில விளக்கங்களை கூறினார். ராமதாஸ் அண்ணா அவர்கள் எனக்கும் குரு உங்களுக்கும் குரு. அவர் உடல்தான் மறைந்தது. அவர் மறையவில்லை. ஆனால் நீங்கள் எல்லாம் அவர் மறைந்துவிட்டதாக நம்பிவிட்டீர்கள். ஆனால் நான் இன்றும் அவரோடு பயணம் செய்கிறேன் இப்போதும் பயணிக்கிறேன் என கூறி மேலும் பல விளக்கங்களை சொல்லி அதே அறையில் தியானத்தில் அமர்த்தி தீட்சையும் கொடுத்து ஆசி வழங்கினார்.

மீண்டும் நான் இங்கு வரும் வரை இப்பயிற்சியை தொடரவேண்டும் என்று கட்டளையாகவும் கூறினார். இந்நிகழ்வு களை கண்காணித்து கொண்டிருந்த எங்களை குரு அவ்வறைக்குள் கூப்பிட்டார் அந்த சிலையை காண்பித்தார் அது வேறுயாறுமில்லை பகவான் சாய் பாபாவின் ஜம்பொன் சிலை. ஒரே நேரத்தில் தாய்க்கு பாபாவாகவும் மகனுக்கு ராமதாஸ் அண்ணாவாகவும் நமது குரு காட்சி தந்ததை மறக்க முடியாது. எல்லாம் குரு எல்லாமே குரு! குரு வாழ்க! குருவே துணை.

சீரடி சாய்பாபாவின் வாழ்வில் நடந்த பல உன்னதமான நிகழ்வுகளை அவரது வாழ்க்கை வரலாற்றில் பார்க்கலாம்.

சீரடி சாய்பாபாவிடம் யார் ஒருவர் உண்மையிலேயே தனது இதயத்தை ஒப்படைக்கிறாரோ, அவருக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் நிச்சயமாக கிடைக்கும். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.



# பாபாவின் அடையாளம்

பொதுவாக கடவுளை நெருங்க வேண்டுமானால் கர்மம், ஞானம், யோகம், பக்தி எனும் நான்கு வழிகளில் ஏதாவது ஒன்றை கடை பிடிப்பார்கள். ஆனால் பாபாவை சார்ந்து இருந்தால் இந்த வழிகள் எல்லாம் தாமாகவே வந்து விடும். இது தொடர்பாக பகவான் சாய்பாபா கூறுகிறார்.

''உணவு, உடை இவற்றைப் பொறுத்த மட்டில் வறுமையோ, இல்லாமையோ எனது அடியவர் களின் வீட்டில் இருக்காது. தங்களது மனதை எப்போதும் என் மீது நிலைப்படுத்தியவர்கள் மற்றும் என்னையே முழுமையாக நம்பி வழிபாடு செய்வர்களின் நலன்களை கவனித்துக் கொள்வது எனது சிறப்பு இயல்பாகும்.

எனவே உணவுக்காகவும் உடைக்காகவும் கடின முயற்சி எடுக்காதீர்கள். உங்களுக்கு எது வேண்டுமோ அது பற்றி கடவுளிடம் கேளுங்கள். கடவுளின் அருளையும் ஆசியையும் பெற முயற்சி செய்யுங்கள்.

இந்த உலக வாழ்வை எண்ணி அதுதான் கவுரவம் என்று நினைக்காதீர்கள். அது கவுரவம் அல்ல. கடவுள் சன்னிதானத்தில் தான் உங்களுக்கு கவுரவம் கிடைக்கும். உலக வாழ்வியலில் உள்ள கவுரவங்களை நினைத்து தவறான வழிகளில் சென்று விடாதீர்கள். அதற்கு மாறாக உங்கள் மனம் எப்போதும் இறைவன் மீதே இருக்கட்டும்.

இவ்வாறு கூறிய பாபா அதற்கு பக்தர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்கமாக கூறினார். ஆனால் சில விஷயங்களில் பாபா



வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதற்கு பதில் யோகப் பயிற்சிகள் மூலம் அவர் தனது மகத்துவங்களை அடிக்கடி அற்புதங்களாக நிகழ்த்திக் காட்டினார்.

சாய்பாபா இளம் வயதிலேயே யோகப் பயிற்சிகள் அனைத்தையும் தெரிந்து கொண்டார். யோகக் கலையானது பாபாவைத் தேடி வந்து அவரைச் சேர்ந்து கொண்டது. பாபா வெறும் வேப்பிலையை மட்டுமே சாப்பிட்டு யோகப் பயிற்சிகளைச் செய்தார். இந்த பயிற்சியின் காரணமாக அவர் 12 ஆண்டுகள் எந்த உணவும் உண்ணாமல் வாழ்ந்தார்.

அது போல எல்லா சித்திகளும் அவருக்கு கைவரப் பெற்றிருந்தது. சித்த மருத்துவத்தையும் அவர் முழுமையாக தெரிந்து வைத்திருந் தார் எந்த மருத்துவரும் செய்யாத மருத்துவத்தை அவர் செய்தார். இதனால் மருத்துவர்களால் கைவிடப்பட்ட எத்தனையோ நோயாளிகளை அவர் பிழைக்க வைத்தார்.

சாய்பாபாவுக்கு எல்லாவித யோகாப் பயிற்சிகளும் தெரியும். அவற்றுள் அவர் தவ்தி யோகப் பயிற்சியையும் கண்ட யோகம் எனும் யோகப் பயிற்சியையும் அடிக்கடி செய்தார்.

தவ்தி யோகப்பயிற்சிக்கு சுத்த விருத்தி என்ற பெயரும் உண்டு. இந்த பயிற்சியை அவர் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை செய்வார். துவாரக மாயி மசூதியில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள கிணற்றுக்கு சென்று பாபா குளிப்பார். அப்போது தவ்தி யோகப் பயிற்சியை செய்வார்.

பாபா சிறுவனாக இருந்த போதே இத்தகைய யோகப் பயிற்சிகள் அவருக்கு தெரிந்து விட்டது. ஆனால் அவர் ஒரு போதும் அவற்றை வெளிப்படுத்திக் கொண்டது இல்லை. பாபா சிறுவனாக இருந்த போதே இத்தகைய யோகப் பயிற்சிகள் அவருக்கு கைவந்து விட்டது. ஆனால் அவர் ஒரு போதும் அவற்றை வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

இதனால் அவரது யோகத் திறமையை ஒருவரும் அறிந்திருக்க வில்லை. தனது யோகப் பயிற்சிகள் மூலம் அவர் எத்தனையோ தடவை ஏழைகளுக்கும், தேவைப் படுபவர்களுக்கும் சேவை செய்துள்ளார். பஞ்ச பூதங்களை அவர் ஒரே ஒரு அதட்டல் மூலம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

ஒருவரைப் பார்த்த உடனே அவரைப் பற்றிய எல்லா விபர மும் திரைப்பட காட்சிகளாக பாபாவுக்கு தெரிந்து விடும். சிலர் உடலுக்குள் இருக்கும் நோயைக் கூட அவர் நொடியில் கண்டுபிடித்து விடுவார். சிலரது நோயை அவர் தனது கண்களில் இருந்து கதிர்வீச்சைப் பாய்ச்சி நோய்களை குணப்படுத்தியுள்ளார். யோக கலை மூலம் அவர் நடத்திய இத்தகைய லீலைகள், வியப்பூட்டும்

வகையில் இருந்தன.

பாபாவின் அன்பும் கருணையும் அளவிட முடியாதது. எத்தனையோ தடவை அவர் தம் பக்தர்களுக்காக மழையை நிறுத்தி உள்ளார். மழையை பெய்ய வைத்துள்ளார். சில நேரங்களில் அவர் செய்யும் தியானம் பிரமிக்க வைப்பதாக இருக்கும். தியானம் முடிந்ததும் அவர் வைகுண்டத்துக்கு சென்று வந்ததாக சொல்வார். வைகுண்டத்தில் உள்ளது பற்றி விவரிப்பார்.

அடுத்து நாட்டில் என்ன நடக்கப் போகிறது என்பதை சொல்வார். அது அப்படியே துல்லியமாக நடக்கும். இந்த அற்புத நிகழ்வுகளை பார்ப்பவர்கள் பாபா அவதாரமா? அல்லது சாதாரண மனிதரா என்று குழம்பிப் போனார்கள். இன்னும் கூட பலரிடம் அவர் யோகியா? சித்தரா? குருவா? என்றெல்லாம் குழப்ப நிலை உள்ளது. ஆனால் பக்குப்பட்ட ஆன்மாக்களுக்கு பாபா, கடவுள் அவதாரம் என்பது மிக எளிதாக, தெளிவாகப் புரியும். அதுவே சாய்பாபாவின் தனித்துவ அடையாளமாகும். ●

# உண்மையான ஆன்மீகம்

வெறும் நன்நெறி நீதி கதைகளோ, போதனைகளோ, பூஜைகளோ, மந்திரப்பயிற்சிகளோ தெய்வ அறிவுணர்வினை அடைவதற்கு உனக்கு உதவி செய்யாது. நான் யார் என்ற ஆன்மாவை அறியும் ஆன்மீகப் பயிற்சி மூலந் தான் இதனைச் சாதிக்க இயலும். ஏனெனில் இது உனக்குள் உறைந்திருக்கும் ஆன்மாவின் அடிப்படையான உயர்மாற்றம். அதுவே ஆத்மானுபூதி எனப்படும்.

உயர் மெய்ஞானப்பாதையான நான் யார் என்பதை அறியும் ஆன்மீக வழிக்கு முக்கிய இடைஞ்சலாக இருக்கும் மனதை நீக்குவதன் மூலம் தான் நாம் கடவுளின் அருளைப் பெற முடியும். கடுமையான தியானப்பயிற்சியே இதற்குரிய ஆற்றலைப் பெறுவதற்குண்டான நேர் வழியாகும்.



உனக்குள்ளேயே இருக்கும் இறைத்தன்மை நீ அழைக்க வேண்டும் என்று காத்திருக்கிறது. மனதில் எழும் சபல புத்திகளை மனிதன் கைவிட வேண்டும். உள்ளே அன்பான தெய்வத்தன்மையின் அறிவை உணர்ந்து கொண்டு அவன் செயல் புரிய வேண்டும். அவ்வாறு செய்யும்போது, அவனது முக்குணங்களும் தாமாகவே புனித வழிகள் மூலமாகத் தான் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும். இது தான் உண்மையான ஆன்மீகமாகும்.



# சரணாகதி!

லட்சுமணன் மாபெரும் வலிமையுள்ள வீரன். சரணாகதியின் எடுத்துக்காட்டு. இராமன் வன வாசம் சென்றபோது, இனி தனக்கு எல்லாம் அண்ணனே என்ற சரணாகதியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவன். ஒரு சமயம், வனவாசம் செய்த போது காட்டில் சென்று கொண்டிருந்த லட்சுமணனிடம் இராமன் ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து, தானும் சீதையும் வசிப்பதற்கு ஏற்ற பர்ணசாலை கட்டுமாறு லட்சுமணனுக்கு ஆணையிட்டார்.

இதைக் கேட்ட லட்சுமணன் மிகுந்த மன வலியினால் துடிதுடித்து, தரையில் விழுந்தவன் அண்ணன் இராமனின் அருளை இழந்ததாக புலம்பினான். அதைக்கண்ட இராமன், லட்சுமணா ஏன் இப்படி அழுது புலம்புகின்றாய். உன்னால் நாம் வசிப்பதற்கு தகுந்தால் போல் நிலத்தை தேர்ந்தெடுத்து பர்ணா சாலை கட்ட முடியும் என்றல்லவா நினைத்தேன் என்று கூறினார்.

அதற்கு லட்சுமணன் அண்ணா, "உம்மிடமிருந்து வேறாக ஒரு உள்ளம் எனக்கு இருப்பதாக நினைக் கிறீரா? உங்களிடம் இருந்து வேறாக எனது பகுத்தறிவைப் பயன்படுத்தி, நிலத்தைத் தேர்ந்தெடுப்பேன் என்று நீங்கள் எவ்வாறு நினைக்கலாம்? எங்கே நிலம் தேர்ந்தெடுக்க வேண்டும், எவ்வாறு பர்ணசாலை கட்ட வேண்டும் என்று ஆணை யிடுங்கள். நான் அவ்வாறு செய் கிறேன். எனக்கென்று தனியாக தீர்மானம் ஏதுமில்லை. நான் அதை வெகு நாட்களுக்கு முன்னால் உம்மிடம் ஒப்படைத்து விட்டேன் என்றான் லட்சுமணன். இதுவே பரிபூரண சரணாகதி. ●



# பகவான் சாயிநாதரின் தனித்துவம்

இறைவனின் அவதாரங்கள் எல்லாமே விசேஷமானவைதான் என்றாலும் பாபாவின் அவதாரம் மிகவும் விசேஷம் பெற்றதாகும். இராமர், கிருஷ்ணர் அவதாரங்களில் அவர்கள் பல இடங்களுக்கும் சென்றார்கள். அதேபோல் ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வர் போன்ற மகான்கள் பாரத தேசம் முழுவதும் பயணித்து பாரத மக்களுக்கு நன்மைகளைச் செய்தார்கள்.

ஆனால் சாய்பாபா ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கும் மேலாக சீரடியை விட்டு எங்கும் செல்லாமல், இருந்த இடத்தில் இருந்து கொண்டே பலரைத் தன் இருப்பிடத்திற்கு இழுத்து அருள் புரிந்து தம் அவதார நோக்கினை நிறைவு செய்தார். இதனால் பாபாவின் அவதாரம் மிகச் சிறப்பானதாகப் போற்றப்படுகிறது.

பாபா பல பக்தர்களின் கனவில் தோன்றியும் பல மகான்கள் மூலமாகவும், தன்னைக் வெளிப் படுத்திக் கொண்டார்.

பலரின் வாழ்க்கையையும் மாற்றிய பாபாவின் வரலாற்றில் மேகா எனும் பக்தனின் வாழ்க்கை பலருக்கும் பாடமாக அமைந்தது. ராவ்பகதூர் ஹரி விநாயக்ஸாடே என்பவரின் பிராமண சமையல்காரன் மேகா. இவன் சாஸ்திரங்களையோ, புராணங்களையோ படித்தவ னில்லை. ஆனால் சிவன் மேல் மிகுந்த பற்றும், பக்தியும் கொண் டவன். வேறு தெய்வங்களை சிந்திக்கக் கூட மறுப்பவன். இத்தகைய மேகாவை அவனின் முதலாளி சாய்பாபாவிடம் செல்லுமாறு பணித்தார்.

முதலில் மறுத்த மேகா, வேறு வழியில்லாமல் சீரடி செல்ல ஒப்புக் கொண்டு புறப்பட்டான். வழியில் அவன் சந்தித்த சிலர் "சீரடி சாய்பாபா ஒரு முகமதியர், பிராமணனான நீ அவரை வழிபடச் செல்லலாமா' எனக்கேட்டு அவனைக் குழப்பத்தில் ஆழ்த் தினார்கள். எனவே மேகா பாதி வழியில் பாபாவிடம் செல்லாமலே முதலாளியிடமே திரும்பி விட்டான்.

சிறிது நாட்கள் கழித்து பின் முதலாளி ஸாடே சீரடி புறப்படு மாறு கூறினார். அதற்கு மேகா "ஒரு முகமதியரை வணங்க என்னை அழைக்காதீர்' என்றான். அப்போது ஸாடே, "மேகா நீ நினைப்பது போல் பாபா முகமதியர் அல்ல, அவரே பரம்பொருள். உன் நன்மையின் பொருட்டே என் மூலம் உன்னை அழைக்கிறார் மறுக்காதே' என்று கூறி சீரடியில் இருக்கும் தனது மாமா கணேஷ் தாமோதருக்கு பாபாவிடம் அறிமுகப்படுத்துமாறு கடிதம் கொடுத்து அனுப்பினார்.

முழுமனதுடன் இல்லாவிட் டாலும் மேகா சீரடி சென்றான். தமோதருடன் மசூதிக்குள் நுழைந்த மேகாவை பாபா கோபமாகத் திட்டி, பிராமணனான உனக்கு முகமதியனிடம் என்ன வேலை என்றும் கேட்டார். அதனால் மேகா பாபாவைச் சந்திக்காமல் சிறிது நாள் சீரடியில் தங்கிய பின் "திரியம்பகேஸ்வரம்' சென்று விட்டான்.

திரியம்பகேஸ்வரத்தில் தங்கிய மேகாவிற்கு பாபாவின் நினைவே வந்து சென்றது. பல நாள் முயற்சித்தும் பாபாவின் நினைவே தொடர்ந்ததால் பாபாவைச் சந்திக்க சீரடி திரும்பினான். பாபாவின் அடியவர் தாதா கேல்கர் மேகாவிற்காகப் பரிந்து பேசி பாபாவிடம் அனுமதி பெற்றார். பக்குமடைந்து திரும்பிய மேகாவை பாபா புன்னகையோடு வரவேற்றார்.

பின்னர் கண்களாலேயே மேகாவை மன அமைதிகொள்ள வைத்தார். நயன தீட்சை பெற்ற மேகாவிற்கு அவன் கண்களையே நம்பமுடியவில்லை! ஆம், அவன் எதிரில் பாபா இல்லாமல் பரம சிவனே அமர்ந்திருந்தார். கண்

முன் சிவனைக் கண்ட மேகா சத்தியத்தினை உணர்ந்தவனாய் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

பின்னர் பாபாவின் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்தவனாய், தினந்தோறும் பணிவிடைகள் செய்து பாபாவின் பாதங்களுக்கு அபிஷேகம் செய்து அத்தீர்த்தத்தினைப் பருகினான். தான் வணங்கும் இறைவனான சாய்சிவனை விட்டு எங்கும் பிரிவதில்லை என்று சங்கல்பித்துக் கொண்டவனாய், மேகா சிவ பூஜைக்கு வேண்டிய வில்வ இலைகளை வெகுதூரம் சென்று பறித்து வந்து பாபாவிற்கு பூஜை செய்தான்.

இருப்பினும் அதற்கு முன் சீரடியில் இருந்த கண்டோபா கோயிலுக்குச் சென்று வருவதையும் வழக்கமாகக் கொண்டான்.

பாபா அனைத்தும் அறிந்தவராய் மேகாவின் பணிவிடைகளை ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் ஏதோ காரணத்திற்காகக் கண்டோபா கோயில் திறக்கவில்லை. இருந்த போது மேகா தன் கடமையைச் செய்ய மசூதிக்கு வந்தான்.

மேகா உள்ளே வந்தவுடன் பாபா அவனிடம் மேகா நீ இப்போ கண்டோபா கோயிலுக்கு போய்விட்டு வா' என்றார். பாபாவின் முன் மறுப்பு என்பதையே அறியாதிருந்த மேகா கண்டோபா கோயிலுக்கு வந்தான். என்ன ஆச்சர்யம் தற்போது கோயில் திறந்திருந்தது! பாபாவே சிவன், சிவனே பாபா என்ற நிலைப்பாட்டில் மேலும் உறுதி கொண்ட மேகா சிவனுக்குப் பிடித்த கங்கை நீர் அபிஷேகம் செய்ய விரும்பினான்.

ஆனால் பாபா பல முறை மறுத்தார். காரணம் சீரடி மக்கள் 15 கி.மீ. தொலைவில் இருந்த கோமதி நதியையே கங்கையெனப் போற்றினார்கள். மேகா அவ்வளவு தொலைவு சென்று வர வேண்டுமே என்று பக்தன் மேல் கொண்ட அன்பினால் பாபா மறுத்தார். ஆனால் மேகாவின் வற்புறுத்தல் அதிகரிக்கவே மகரசங்கராந்தி அன்று அபிஷேகத்திற்கு ஒப்புக் கொண்டார். மேகா மிகுந்த சிரமப்பட்டு பல குடங்களில் நீரைச் சேகரித்து கொண்டு வந்தான்.

அபிஷேகம் ஆரம்பிக்கும் போது பாபா சொன்னார் "மேகா எண் ஜான் உடம்பிற்கு சிரசே ப்ரதானம் எனவே தலையில் மட்டும் நீரினை ஊற்று' என்றார். கூடியிருந்த மக்களின் ஆரவாரத்தோடு அபிஷேகம் தொடங்கியது.

பாபாவிற்கு அபிஷேகம் செய்யும் ஆனந்தத்தில் இருந்த மேகா உடலிலும் நீரை ஊற்றினான். என்ன ஆச்சர்யம் துளி நீர் கூட உடலின் பகுதியை நனைக்கவில்லை! சிரசில் பட்டே சிதறின. மேகாவும் மக்களும் பாபாவின் லீலையில் தங்களை மறந்து பணிந்தார்கள்.

ஒருநாள் மேகாவின் கனவில் தோன்றிய பாபா வாடாவில் வைத்து வணங்கும் தன் படத்திற்குப்



பின் திரிசூலம் ஒன்றை வரையுமாறு கூறி சில அக்ஷதைகளைத் தூவியும் ஆசிர்வதித்தார்.

விழித்தெழுந்த மேகா பூட்டிய அறையில் அக்ஷதைகள் சிதறி யிருப்பதைக் கண்டு ஆச்சர்யம் கொண்டு பாபாவிடம் நேரில் விளக்கம் கேட்டான். அதற்கு பாபா "நான் பக்தனைக் காண வேண்டும் என்று நினைத்தாலோ காக்க வேண்டும் என்று நினைத்தாலோ எனக்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. எனக்கென்று தனி உருவமோ வடிவமோ கிடையாது. எங்கும் எதிலும் தோன்ற முடியும்' என்றார். "என்னை நம்பிச் செயல்படும் எல்லோர் செயல் முன் நின்றும் நான் காப்பேன்' என்றும் கூறினார். பாபாவின் ஆணைப்படியே மேகா சூலம் வரைந்து வைத்தான்.

மறுநாள் திரிசூலத்திற்கு ஏற்றதான ஒரு சிவலிங்கத்தை பூனாவைச் சேர்ந்த ராம்தாசி என்பவர் மூலம் கிடைக்கச் செய்தார். பல ஆண்டுகள் மன அமைதியுடன் வாழ்ந்த மேகா பாபாவிடம் பூரண சரணாகதி அடைந்தார். மேகா ஒரு நல்ல நாளில் சிவபதவி அடைந்தார். அன்று பாபா மிகுந்த துக்கம் கொண்டவராய் இருந்ததோடு மேகாவின் உடலுக்கு மலரஞ் சலியும் செய்தார்.

பின்னர் பக்தர்களிடம் அவன் உண்மையான பக்தன் என்றும் கூறிவிட்டு பத்தாம்நாள் தம் செலவில் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்தார்.

தன்னை சந்திக்கக்கூட மறுத்த ஒருவனை வாழ்நாள் முழுவதும் தன்னுடனே வைத்துக் கொண்ட பாபாவின் செயல் ஆச்சர்ய மானதுதானே!

குருவை அடைய வேண்டும், சந்திக்க வேண்டும், ஆசி பெற வேண்டும் என்ற உண்மையான ஆதங்கமும், தவிப்பும்


ஒருவரிடம் இருந்தால் அதற்கான உபாயங்களை குருவே செய்வார் என்பதற்கு உதாரணமாக காகாஜி வைத்யாவின் வாழ்க்கை அமைந்துள்ளது.

நாசிக் ஜில்லாவில் உள்ள வணி எனும் ஊரில் இருந்த ஸ்ரீஸப்தச்ருங்கிதேவி ஆலயத்தில் காகாஜி என்பவர் பூஜை செய்து வந்தார். அவருக்கு திடீரென மனக்குறை ஏற்பட்டது. தக்க குருவை அடைந்து மன அமைதி கொள்ள நினைத்தார். ஆனால் அதற்கான வழி தெரியாமல் தவித்தார்.

முடிவில் தான் வணங்கும் தேவியிடமே தக்க குருவைக் காட்டுமாறு கேட்டார். கனவில் தோன்றி தேவி சிவனின் வடிவாய் விளங்கும் பாபாவை வணங்கு என்றார்.

கனவில் சரியாகப் புரிந்து கொள்ளாத காகாஜி, திரியம்பகேஸ்வரம் சென்று சிவபூஜை செய்து வந்தார். வேண்டிய மன அமைதி கிடைக்காததால் வணிக்கே திரும்பினார். மீண்டும் தேவியிடம் முறையிட்ட போது தேவி "காகாஜி உன்னை சீரடி சாய் பாபாவிடம் தானே போகச் சொன்னேன்' என்றார். மேலும் "நீ கவலைக் கொள்ளாதே நல்லபடியாக எல்லாம் நடக்கும்' என்றும் ஆசிர்வதித்தாள்.

அதே நேரத்தில் சீரடியில் பாபாவின் அடிப்பொடியாக, பாபாவே சகலமும் என எண்ணி வாழும் சாமா, பாபாவின் முன் வெள்ளியிலான இரு மார்பகங்களை



வைத்து இதை ஏற்றுக் கொண்டு குல தெய்வத்தின் கோபத்திலிருந்து காக்குமாறு வேண்டினார். சகலமும் அறிந்த பாபா ஏதும் அறியாதவர் போல் வெள்ளியின் விருத்தாந்தத்தை விளக்குமாறு கோரினார்.

பாபாவின் முன் எதையும் மறைத்தறியாத சாமா ஜோதிடர் மூலம் அறிந்து கொண்டதைக் கூறினார். சாமா சிறுவனாய் இருந்த போது உடல் நலக் குறைவு ஏற்பட்டு விட்டது. நெடுநாள் வரை குணமாகாததால் சாமாவின் தாயார் தங்கள் குலதெய்வமான சப்தசிருங்கி தேவியிடம் தன் மகனை அவரது காலடியில் சேர்ப்பதாக வேண்டிக் கொண்டார். குணமானபின் நாளடைவில் மறந்து விட்டார். பின்னர் சில வருடங்கள் கழித்து சாமாவின் தாயாருக்கு மார்பில் பிரச்சனை ஏற்பட்டது.

தற்போதும் குலதெய்வத்திடம் இரு வெள்ளியிலான மார்பகத்தைக் காணிக்கையாகச் சேர்ப்பதாக

வேண்டிக் கொண்டார். பாபா நினைத்திருந்தால் ஸப்தச்ருங்கி தேவியாகக் காட்சி தந்து அந்தக் காணிக்கையை ஏற்றுக் கொண்டி ருக்கலாம். ஆனால் தன் பக்தன் ஒருவன் தவித்துக் கொண்டிருப் பதை உணர்ந்தவராய் சாமாவின் வேண்டுதலை ஏற்க மறுத்தார். அத்துடன் உடனே வணி சென்று தாயின் வேண்டுதலை நிறைவேற்று மாறு வற்புறுத்தினார் பாபா.

பாபாவிடம் உதிபெற்றுக் கொண்ட சாமா உடனே வணிக்குப் புறப்பட்டார்.

விலைமிகுந்த பொருளைத் தொலைத்த ஏழைபோலவும், மழைக் காக வேண்டி நிற்கும் விவசாயி போலவும், தவித்துக் கொண்டி ருந்தார் காகாஜி. வணி சென்ற டைந்த சாமா, தேவியிடம் சென்று தனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிய னார். அத்துடன் தனது தாயின் சார்பா கவும் மன்னிப்பினைக் கோரினார்.

பிரார்த்தனைகள் முடிந்த பின் காகாஜிடம் தன்னை அனுப்பிய பாபாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது காகாஜி கண்களில் கண்ணீர் வடிய "பாபாவின் அடியவரான தாங்கள் இந்த அடிமையையும் அவரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று' வேண்டினார். காகாஜியின் பக்தியை உணர்ந்த சாமா, சீர்டிக்கு தேவியின் அனுமதியோடு சீரடிக்கு அழைத்துச் சென்றார்.

சீரடி வந்தடைந்த காகாஜி, பாபாவின் பாதங்களைப் பணிந்து கண்ணீரால் அபிஷேகம் செய்தார். பணிந்த நொடியில் மன அமைதி பெற்றவராய் கண்ணீர் பெருக பாபாவைப் பார்த்துக் கொண்டே இருந்தார். கேள்வி பதில் எதுவும் இல்லாமல் அங்கே நீண்ட உபதேசம் நடந்து கொண்டிருந்தது.

ஆதிசங்கரர் தமது ஸ்லோகத்தில் தட்சிணாமூர்த்தி, சிஷ்யர்களுக்கு மௌனம் மூலமாகவே உபதேசம் செய்வதாகச் சொல்லியுள்ளார். அச்செயலை இங்கே, பாபா மக்கள் பலர் முன்னே நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

தெளிவும் அமைதியும் பெற்ற காகாஜி சில நாள் தங்கிய பின் தேவிக்கு பூஜை செய்யும் பொறுப்பு இருந்ததால் பாபாவின் அனுமதி யோடு வணிக்குச் சென்றார்.

பாபா இதைப் போன்று பற்பல அடியவர்களை சீரடிக்கு இழுத்து ஆசிர்வதித்து அவர்களது வாழ்வில் ஒளியேற்றியுள்ளார். அவ்வப்போது இழுக்கப்பட்டவர்களை பாபா சிட்டுக் குருவிகள் என்று அழைப் பார். இச்செயலானது பாபா தமது பூத உடலை விடுத்த பின்பும் இன்றும் நடந்து கொண்டே இருக்கிறது. நாம் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தால் சாய்ராம் எப்போது வேண்டுமானாலும் இழுத்துக் கொள்வார்.

பாபா எனும் வெள்ளம் நம்மை அடைய வேண்டுமானால் நாம் உள்ளம் உருகி வழிய விடும் கண்நீரை நிறுத்தக் கூடாது.

பாபாவைப் பணிவோம்! பிறவிப்பயன் பெறுவோம்! ●



# நோய் எதிர்ப்பு சக்தி தரும் பூண்டு

பூண்டு ஜலதோஷத்தை குணப்படுத்தும், ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், கொழுப்பைக் கட்டுப்படுத்தும்.

ஆனால், இந்த அனுமானங்கள் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப் பட்டுள்ளனவா? உணவில் பூண்டு எவ்வளவு பயன்படுத்த வேண்டும்? பூண்டு ஜலதோஷத்திற்கு மட்டுமல்ல, பல நோய்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது.. ஆனால் இந்த விஷயங்கள் உண்மையா என்பதைப் பார்ப்போம்.

"பூண்டில் பொட்டாசியம், பாஸ்பரஸ், துத்தநாகம் மற்றும் கந்தகம் அதிகம் உள்ளது. மிதமான அளவில் மெக்னீசியம், மாங்கனீசு, இரும்புச் சத்து உள்ளது. இதுவொரு அற்புதமான உணவு மூலப்பொருள்," பச்சைப் பூண்டில் அல்லிசின் அதிகம் உள்ளது. இது பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட கந்தக கலவை. இது நிச்சய மாக ஆரோக்கியத்திற்கு நல்லது.

இது ஊட்டச்சத்துகளை வழங்கு வது மட்டுமல்லாமல், ப்ரீபயா டிக் நார்ச்சத்துக்கான சிறந்த ஆதார மாகவும் உள்ளது. உங்கள் குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை வளர்ப்பது முக்கியம்.

"குடலில் உள்ள இந்த நல்ல பாக்டீரியாக்களுக்கு செரிமான அமைப்பை ஆரோக்கியமாகவும் சரியாகவும் வைத்திருக்க நார்ச்சத்து தேவை."

இரானில் 2016ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், பங்கேற் பாளர்கள் 20 கிராம் பூண்டு மற்றும் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு ஆகியவற்றின் கலவையை 8 வாரங்களுக்கு தினமும் எடுத்துக் கொண்டனர். முடிவுகள் நேர்மறையாக இருந்தன. இந்தப் பரிசோதனையில் கொழுப்பு, ரத்த அழுத்தம் இரண்டும் குறைவதாகக் காட்டப்பட்டுள்ளது.

"பூண்டு பெருங்குடல், மலக்குடல், மார்பகம் மற்றும் புரோஸ்டேட் போன்ற புற்றுநோய் பாதிப்புகளில் நன்மை பயக்கும் என்பதை நிரூபித்துள்ள பல அறிவியல் ஆய்வுகள் உள்ளன. பச்சைப் பூண்டு, பூண்டு சாறு அல்லது அல்லிசின் பயன்படுத்தி, மனிதர்கள் மீது 83 சோதனைகள் நடைபெற்றுள்ளன. அதில், பூண்டு சாப்பிடுவதால் புற்றுநோய் உட்படப் பல பிரச்னைகளில் நன்மை பயக்கும் விளைவுகளைக் காட்டியது.

"வாரத்திற்கு இரண்டு பல் பச்சைப் பூண்டுக்கு மேல் சாப்பிடு பவர்கள் மீதும் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய உணவுகள் புற்றுநோயின்



அபாயத்தைக் குறைக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது."

குளிர்கால நோய்த் தொற்று களைத் தடுக்க பூண்டு பயன்படுத்து வதை ஆதரிக்கும் சான்றுகள் உள்ளன. பூண்டில் ஆன்டிபயாடிக், ஆன்டிவைரல் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பூண்டின் ஆன்டிவைரல் பண்புகள் பற்றிய ஆய்வுகள், பூண்டில் பல வைரஸ் எதிர்ப்பு பண்புகள் உள்ளதாகவும், செல்களுக்குள் வைரஸ்கள் நுழைவதைத் தடுக்கும் என்றும் தெரிய வந்துள்ளது.

வாரத்திற்கு ஒரு முறையா வது பூண்டை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். உணவில் பூண்டை எப்படி அதிகம் பயன்படுத் துவது என்பது குறித்து சமையல் கலை நிபுணர் லின்ஃபோர்ட் கூறி னார். உங்கள் விருப்பப்படி பூண்டை உணவில் பயன்படுத்தலாம் என்றார். நீங்கள் பூண்டின் சுவையை விரும்பினால், உங்கள் சமையலில் பூண்டு விழுதைப் பயன்படுத்தலாம். ஆனால் நீங்கள் பூண்டின் மணத்தை மட்டும் விரும்பினால், பூண்டு பற்களை ஆலிவ் எண்ணெயில் வறுத்து பின்னர் அதை வடிகட்டி, அந்த எண்ணெயைப் பயன்படுத்தலாம்.

உங்கள் சாலட்டில் பூண்டு சுவையை நீங்கள் விரும்பி னால், சாலட் கிண்ணத்தின் உட்புறத் தில் பூண்டு பற்களைத் தேய்க்கலாம். பூண்டு அறையின் வெப்பநிலையில் வைக்கப்பட வேண்டும். பூண்டு மென்மையாகவோ அல்லது பழுப்பு நிறமாகவோ மாறினால், அது கெட்டுப் போனதாக அர்த்தம். அதை சமையலில் பயன்படுத்த வேண்டாம்.

பூண்டு அனைவருக்கும் நல்லதா?

பூண்டு சாப்பிடுவதால் சிலருக்கு வயிற்றில் பிரச்னை ஏற்படும்.

துரதிருஷ்டவசமாக, பூண்டு சிலருக்கு தொந்தரவாக இருக்கும். குறிப்பாக குடல் எரிச்சல் (IBS) கொண்டவர்களுக்கு தொந்தரவாக இருக்கும்.

எனவே, இந்தப் பிரச்னை உள்ள குழந்தைகள் மற்றும் பெரிய வர்கள் தங்கள் உணவில் பூண்டு பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

பூண்டின் சுவையை அதிகரிக்க சமைக்கும்போது பூண்டு கலந்த எண்ணெயைப் பயன்படுத்துவது ஒரு நல்ல வழி. இந்த முறையில் பயன்படுத்துவது, குடல் எரிச்சல் உள்ளவர்களைக் குறைவாகவே பாதிக்கும்.

வாழ்க வளமுடன்! வாழ்க ●

# வாசகர் குரல்...




## நவரத்தினங்களைப் போன்று ஒளி வீசும் பெட்டிச்செய்திகள்

**எ**னது குருவும், ஆசிரியருமான யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு அநேகங்கோடி நமஸ்காரங்கள். எப்பவும்போல் இம்மாத இதழ் ஒரு பொக்கிஷமாக என் கைகளுக்கு கிடைத்திருக்கின்றது தனித்தனியாக ஒவ்வொரு விசயத்தையும் உணர்வுப் பூர்ணமாக எழுதினால் இரண்டு பக்கத்திற்கு மேல் ஆகிவிடும். அனைத்து செய்திகளும் அற்புதம் குறிப்பாக இந்த இதழில் வந்த செய்திகள் அனைத்தும் எனக்குண்டான செய்தியாகவே இருந்ததில் மிக்க மகிழ்ச்சி!

**திருமதி. இந்துமதி. அயனாவரம்.**

**இ**ம்மாத இதழில் வெளிவந்த நான்கு பெட்டிச் செய்திகளும் மிகவும் சிறப்பானதாக இருந்தது. நான் யார் கட்டுரை பல செய்திகளை எனக்கு விளக்கிக் கூறியது. அமுத மொழி மறக்க முடியாத மோழி. குருவுடன் மௌன அனுபவம் அருமை. மொத்தத்தில் முழுச்சாப்பாடு சாப்பிட்ட திருப்தி!

**திரு. இராமராஜன், விழுப்புரம்.**

**வ**ணக்கம் குருவே இம்மாத இதழில் தாங்கள் எழுதியிருந்த சாய் சரிதம் படித்தேன். பகவான் சாய்நாதர் தன் பக்தர்கள் செய்யும் தவறுகளையும், அவர்கள் செய்யும் தானத்தையும்,தான் அமர்ந்த இடத்தில் இருந்து அறிந்து கொள்ள முடியும் என்பதை அருகில் உள்ள மக்களுக்கு உணர்த்தியிருகின்றார் என்பதும், பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறியதில் ஆரம்பித்து "மனிதர்கள் எவ்விதம் என்னை நம்புகின்றார்களோ அவ்விதமே நான் அவர்களை ஏற்றுக்கொள்கிறேன் என்பது வரை மிக சிறப்பாக எனக்கு புரியும்படி இருந்தது. ஆத்ம ஞானப் பார்வையில் சாய் சரிதம் கொடுத்ததற்கு நன்றி! எல்லாம் குரு! எல்லாமே குரு! வாழ்க வளமுடன்.

**திருமதி. தனம் அகஸ்டின், திருநீர்மலை.**

**சா**யி கைவிட்டதாக சரித்திரம் இல்லை. நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை. அதை நான் என் வாழ்நாளில் அனுபவித்துள்ளேன். நீங்கள் எழுதிய கட்டுரையை படித்தபோது என் வாழ்க்கையில் சாயி அல்ல, என் வாழ்க்கையே சாயிதான் என்பது புரிந்தது

நன்றி சாய்ராம். சீரடி புனித யாத்திரை கட்டுரை சிறப்பு.

**திரு. சம்பந்தம், கடலூர்.**

**மூ**ர்த்தி சிறிதானாலும், கீர்த்தி பெரியது என்பதற்கிணங்க சாயி

புகழ் பரப்பும் சாயி மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழின் பணி மகத்தானது. சிறப்பானது. எனவே விலை ஏற்றம் பெரிதல்ல. என்னைப்போன்ற பலர் தொடர்ந்து சாயிபாபாவின் புகழ் பரப்பும் உங்கள் இதழுக்கு எங்களது ஆதரவு எப்போதும் உண்டு என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திரு. பிரசாத் சாய் மற்றும் நண்பர்கள், தஞ்சை.**

நான் யார் கட்டுரை மிகப் பயனுள்ளதாக இருந்தது. ஆத்மஞானம் சிறப்புச்செய்தி. குருவுடன் மௌன அனுபவம் அற்புதம் நமக்கு அந்த அனுபவம் கிடைக்க வில்லையே என்று ஏக்கப்படவைத்தது. நான் ஏற்கனவே உங்களது மௌனப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளேன். சென்னையில் நடக்கும் மௌனம் பயிற்சி பற்றி தெரிவியுங்கள். நானும் கலந்து கொள்ள ஆர்வமாக இருக்கின்றேன்.

**திரு. விஸ்வநாதன், மதுரை.**

சீரடி புனிதப் பயணம் கட்டுரை மிகச்சிறப்பாக இருந்தது. உங்களுடன் நானும் சீரடி சென்று வந்தது போல் இருந்தது. பெட்டிச்செய்திகள் அனைத்தும் நவரத்தினங்களைப்போன்று ஒளி வீசுகின்றன. மற்ற அனைத்து செய்திகளும் கற்கண்டைப் போன்று தித்திப்பாக இனித்தன. நன்றி!

**திருமதி. கோமதி, நங்கநல்லூர்.**

மாதா மாதம் வரும் மருத்துவம் உங்கள் இதழில் உண்மையிலேயே பயனுள்ள பகுதி. நான் தொடர்ந்து படிப்பதோடு அல்லாமல் அதை எனது உணவிலும் சேர்த்துவருகின்றேன். சென்ற இதழில் வெளிவந்த அகத்திக்கீரை கட்டுரை நிறைய அவசியமான செய்திகளை தந்தது. இனி வாரம் ஒரு முறை என் உணவில் அகத்திக்கீரை இடம் பெறும் ஆசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**திரு. செல்வவிநாயகம். விழுப்புரம்.**

சித்தர்களின் சீவசமாதி தரிசனம் இம்மாதம் கிருபானந்தவாரியார் பற்றி அறிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி. சீரடி புனிதப்பயணம் கட்டுரை நானும் சீரடி செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுகின்றது. உங்கள் புத்தகத்தின் மூலமாக பாபாவை அறிந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

**திருமதி. லீலாவதி, கடம்பூர்.**

**வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**


**சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org**

**சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692**

# அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

**S.Jayanthy, INDIAN BANK**
**AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056**
**(Purasaiwakkam Branch) Chennai**
**Gpay: 6385129372**

## இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. சரஸ்வதி குணசேகரன், வலங்கைமான். ரூ.3000.

திருமதி. சுந்தரவள்ளி, மந்தைவெளி, ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி.மகாலட்சுமி முருகன். மதுரை. ரூ.2000.

சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திரு. என். வெங்கடாசலம், டி.நகர், ரூ.1000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

திரு.கேஸ்வர், ஈரோடு, ரூ.700.

திருமதி.வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி. லதா தசரதன். திருவொற்றியூர். ரூ.500.

திருமதி. இந்துமதி பலராமன். அயனாவரம். ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500

திரு.நாராயண பாபு, வில்லிவாக்கம். ரூ.501

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.லதா பாபு, வேப்பம்பட்டு. ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.

திருமதி. பவித்ரா, கொளத்தூர். ரூ.300.

திருமதி. மீனாட்சி, சேலம், ரூ.270.

திருமதி. உமா மகேஸ்வரி,அற சோதிடம் அயனாவரம். ரூ.250

திருமதி.ஆர்.வரலட்சுமி, முகப்பேர். ரூ.100.

திரு. டி. சுகன்யா, சென்னை. ரூ.201.

திருமதி.இராஜேஷ்வரி, இராமநாதபுரம். ரூ.200.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திருமதி.பிச்சையம்மாள், பெரம்பூர்.ரூ.100.

திருமதி.திலகா ஷ்யாம்சுந்தர். ரூ.101.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

# சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 320 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 850 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1,400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு.3,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

## ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

## புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. கதிரேசன், கொட்டையூர், ரூ.1000
திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி. ரூ.500
திரு.ரத்தினக்குமார் குமாரசாமி, சென்னை. ரூ.500
திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர். ரூ.200
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், .நங்கநல்லூர் ரூ.100
திரு. கோபால் சாய், விருகம்பாக்கம். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.







எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



## அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


## குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

## தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!




* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

## சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்




100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்




## அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

## அமிர்தா வேலம்பட்டை பல்பொடி




பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068